
விலை சதம் 20

# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, சித்திரை 19 உ வியாழன் (1-5 69) ஸபர் 13 புத்தகம் 23 இதழ் 27




## பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம் கண்டனம்

## மே தினத்தில் கூட்டம் நடத்த

## பொலீஸ் தடைவிதித்தது



# அநியாயம்

'உலகெங்கும் தொழிலாளர்களின் உரிமைக்குரல் எழுப்பப்படும் மே முதல் நாளில் இந்த நாட்டில் மட்டும் அதற்குத் தடை விதித்துள்ள போலீஸ் அதிபரின் செயல் கடைந்தெடுத்த ஏதேச்சாதிகார நடவடிக்கையாகும். வெசாக் தினம் பெருமளவில் கொண்டாடப்படாத தமிழ் பகுதிகளில் கூட பொதுக் கூட்டங்களுக்கு தடை விதித்துள்ள செயல் இந்நாட்டில் ஒரே மதம் மட்டுமே யிருக்க வேண்டுமென்றும், அந்த மதத்தினரின் அனுட்டானங்களெல்லாம் ஏனைய மதத்தவர்களிடம் திணிக்கப்படுமென்றும் கருதப் பட இடமளித்துவிட்டது.

"இருந்த போதிலும் பௌத்த பெருமக்களின் அன்பு வேண்டுகோளுக்கு செவி சாய்த்து, அவர்களது மனங்களைப் புண்படுத்தக் கூடாதென்ற காரணத்துக்காகவும் மதப் பூசல்களைத் தவிர்ப்பதற்கும் மே முதல் நாளில் தமிழரசுக் கட்சி தமிழ்ப் பகுதியில் நடத்த விருந்த மே விழாக் கூட்டங்களை ஒத்திவைத்துள்ளது. இனிமேல் இத்தகைய அநீதியான உத்தரவுகளை பொலீஸ் அதிபர் பிறப்பிக்காவண்ணம் பிரதமர் கவனித்துக்கொள்ள வேண்டும்.

—இவ்வாறு பாராளுமன்றத்தில் இம் மாதம் 26ம் திகதி உரையாற்றிய தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. கூறினார். திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:-


'இந்த நாட்டில் ஒவ்வொரு பிரச்சினைக்கும் இனமத கண்ணுடி போட்டுப் பார்த்து துவேஷத்தை கிளப்புவது துரதிஷ்டமானது. இதில் சில பத்திரிகைகளும், தனிப்பட்ட மனிதர்களும் ஈடு பட்டிருக்கிறார்கள்.

'வெசாக் தினத்தில் அரசியல் கூட்டங்களை பொலீஸ் அதிபர் தடை செய்திருப்பதாக யாழ் அரசாங்க அதிபர் எமக்கு திடீரென அறிவித்தார். ஒலிபெருக்கி பாவனைக்கோ, ஊர்வலத்துக்கோ தடை விதிப்பது பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், பொதுக் கூட்டங்களுக்கு தடை விதித்ததைத்தான் நான் முற்றாக எதிர்க்கிறேன். பொலீஸ் அதிபருக்கு இப்படி செய்வதற்கு அதிகாரம் கிடையாது.

இந்துக்கள் பௌத்தத்தின் மேல் மதிப்பு வைத்துள்ளார்கள். வெசாக் தினத்தை புனிதமாக கருதுகிறார்கள். ஆனால் இதன் பொருள் வெசாக்தினத்தில் பொதுக் கூட்டம் நடத்தக் கூடாதென்பதல்ல.

மோதல்கள் ஏற்படக் கூடிய இடங்களில் தடை என்றாலும் பாதகமில்லை— வெசாக் விழாக்களே பெருமளவில் நடைபெறாத தமிழ்ப் பகுதியிலும் ஏன் தடை விதிக்கவேண்டும்?"

### பயனற்ற முயற்சி




மாவட்டசபை விவகாரம்

# பிரதமருக்கு தமிழரசு எம்.பி. பதிலடி!

மாவட்டசபை மசோதாவைக் கொண்டு வர வேண்டாமென்று தமிழரசுக்கட்சியினரே தமக்கு ஆலோசனை கூறியதாக பிரதமர் அரசாங்கப்பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் தெரிவித்தது விஷமத்தனமானது என தமிழரசு எம். பி. யொருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் இதுபற்றி கூறியதாவது:-

"மாவட்டசபை மசோதாவை தயாரிப்பதில் அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே வீண்கால தாமதம் செய்து இழுத்தடித்துக் கொண்டே வந்திருக்கிறது. அரசாங்கம் மசோதாவைத் தயாரித்து முடித்து, அதை அரசாங்கக் கட்சியின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்த நேரத்தில், மாவட்டசபை மசோதாவுக்கு எதிரான பிரசாரம் மேலோங்கியிருந்தது.

"அரசாங்கத்தின் காலதாமதத்தை மாவட்டசபைக்கு எதிரான சக்திகள் பயன்படுத்திக் கொண்டன. மசோதாவை தயாரிப்பதில் வேண்டுமென்றே செய்யப் பட்ட காலதாமதமும் மாவட்டசபைக்கு எதிரான பிரசாரத்தை முறியடிப்பதற்கு அரசாங்கத்தின் பிரசார யந்திரம் வேலை செய்யாததுமே எதிர்ப்பு சக்தி வளர்ந்ததற்கு காரணங்களாகும்.

"இந்நிலையில், மாவட்டசபை மசோதாவுக்கு யூ. என். பிக்குள்ளேயே எதிர்பபு பெரிதாக உருவாகி வளர்ந்தது. அந்த எதிர்ப்பு சக்தியைக் கட்டுப்படுத்த முடியாத கையாலாகாத்தன்மையில் பிரதமர் இருந்தார். தன்கட்சியையே கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்க அவரால் முடியவில்லை.

'மாவட்டசபை மசோதா சமர்ப்பிக்கப்பட்டால் அதை எதிர்த்து வாக்களிக்கப் போவதாக யூ. என். பி. எம். பீக்கள் பலா பகிரங்கமாக அறிவித்தனர். தமிழ் காங்கிரசும் அவர்களுடன் சேர்ந்து முண்டு கொடுத்தது.

"இத்தகைய சூழ்நிலையில், தன் கட்சியையே கட்டுப் படுத்தமுடியாமல் கையாலாகாத நிலையிலிருந்த பிரதமர், மாவட்டசபை மசோதாவை —அது தோல்வியுறும் என்று தெரிந்த பின்னரும் பாராளுமன்றத்துக்கு கொண்டுவந்து யாருக்கு என்ன பிரயோசனம்?

"மாவட்டசபை மசோதாவை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற நாம் விரும்பினோமே தவிர அது தோற்கடிக்கப்பட விரும்பவில்லை.

(9ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது தொடர்கதை

# எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு!

பா. பாலேஸ்வரி

## அத்தியாயம் (16)

மறதி என்ற ஒன்றை இறைவன் படைத்திராவிட்டால் மனித சமுதாயம் மண்ணோடு மண்ணாக அழிந்தேஎப்போதுசாம்பராகியிருக்கும். அப்படியான மறதியைக் கொண்டு எதையோ தன் மனதை விட்டு அகற்றி விடத்தான் ரகுவும் முயற்சிக்கிறான். ஆனால் சில நினைவுகளுக்கு மரணம் என்ற ஒன்று ஏற்படுவதேயில்லை. சில சந்தர்ப்பங்களில் சில மனிதர்கள்கூட இந்த நினைவு தரும் நிம்மதியிற்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உமா என்னும் ஓவியம் அவன் இதயத்தில் ஆழமாக பதிந்துவிட்டிருந்தது. இனிமேல் அந்த ஓவியத்தை அவன் இதயத்தில் இருந்து அழிக்கவே முடியாது. அது அழிபட முடியாத மையால் வரையப்பட்டு விட்டது. அவன் எங்கு சென்றாலும் என்னத்தைச் செய்தாலும் உமா அவனைத் தொடர்ந்து கொண்டேயிருப்பாள்.

அதன் பின் அவன் அந்தப் பக்கம் திரும்பவேயில்லை. நேராக நடந்து டஸ்ஸில் ஏறி வீட்டையடைந்தான். அன்று இரவு அவன் சாப்பிடவில்லை. நிர்மலா அவனிடம் கொடுத்த மாத்திரைகள் பத்திரமாக அவன் மடியில் இருந்தன. அதைக் குடிப்பதா விடுவதா என்ற நீண்டநேர சிந்தனைக்குப் பின் ஒரு அன்புள்ளத்தின் ஆத்மதிருப்திக்காக அவள் சொன்னபடி இரண்டு மாத்திரைகளை விழுங்கினான். அதற்கு மேல் இலட்சுமி கொடுத்த காப்பியைக் குடித்து விட்டுப் படுத்துவிட்டான். அன்று இரவு முழுவதும் அவனுக்கு அமைதியாக நித்திரை கொள்ள முடிந்தது.

அடுத்தநாள் வழக்கத்திற்கு விரோதமாக அவன் இரண்டு மூன்று மணி நேரம் பிந்தித்தான் எழுந்தான். அவனுக்கு உடல்நிலை பூரண குணமாகி விட்டது போன்றதோர் உணர்ச்சி ஏற்பட்டது. காலையில் மிஸி கொடுத்த மருந்தைவிட நிர்மலா கொடுத்தது சிறந்ததாக இருக்க வேண்டும் என நினைத்துக் கொண்டான். அன்று பவானியைக் கூட்டிக் கொண்டு வரவேண்டும் என்றது பறக்கவில்லை. ஆனால் அவசரமாக சாயந்திரம் போய்க்கூட்டி வந்தால் போதும் என்ற எண்ணத்தில் முகங் கழுவிப்போட்டு வந்து படுத்துக் கொண்டான்.

சிலநிமிட நேரத்தின் பின் அவனது அறைக் கதவு தட்டப்பட்டுச் சத்தம் கேட்டு எழுந்து சென்று கதவைத்திறந்தவன் திடுக்கிட்டு அப்படியே நின்றான். அங்கே மூட்டை முடிச்சுக்களுடன் பவானி நின்றாள். 'நீயா தங்கச்சி? தனியாகவா வந்தாய், சாயந்தரம் நான் வருவன் என்று தெரியுமல்லவா? அப்படியிருக்க நீ ஏன் தனியாக வந்தாய்? டாக்டருக்கு நீ வந்தது தெரியுமா? என்று அதிர்ச்சியடைந்த நிலையில் கேள்விக்குமேல் கேள்வியாக அடுக்கிக் கொண்டு சென்ற ரகுவைப்பார்த்து கபடமற்ற குழந்தைபோல் சிரித்தாள் பவானி. அவள் சிரிப்பு ரகுவுக்கு எரிகிற அடுப்பில் எண்ணெய் வார்ப்பது போன்றதோர் நிலையை உண்டாக்கியது. அவளை நேரத்துக்கு வீட்டுக்கு அழைத்து வரத்தான் தவறிவிட்டானே என்று பயப்பட்டுக் கொண்டிருந்தவன் தன் தவறைச் சுட்டிக்காட்டத்தான் பவானி அப்படிச் சிரித்தாளோ என்றுகூட நினைத்தான்.

எனக்கு ஒரு கணவன் இருந்தால் அல்லது இரத்தத் தொடர்புடைய சகோதரனாவது இருந்திருந்தால் எப்போது விடிகிறது என்று காத்திருந்து அதிகாலையில் வந்து என்னை அழைத்துக்கொண்டு போயிருப்பார்கள். என்ன இருந்தாலும் நீங்கள் உறவில்லாதவர்தானே. அதனால் அந்த அன்பும் பாசமுங்கூட உங்களை விட்டு அகன்று விட்டது. ஆயிரமிருந்தாலும் நான் உங்களுக்கு ஒரு சுமைதான். அகத்தி ஆயிரம்காய் காய்த்தாலும் பிறத்தி பிறத்திதானே என்று சொல்லாமல் சொல்லிச் சிரிக்கிறாளோ என்று மேற்கொண்டு எதுவும் பேசமுடியாமல் அவன் நின்றபோது ''என்னண்ணா இது? நான் தான் தனிய வெளிக்கிட்டாலும் டாக்டர் என்னைத் தனியாகப் போக அநுமதித்திருப்பார் என்று எண்ணுகிறீர்களா...? நீங்கள் கேட்கும் கேள்விகளைப் பார்க்கும் போது நீங்கள் அதிர்ச்சி அடைந்திருப்பதாகத் தெரிகிறது. போனவருத்தம் உங்களுக்கு எங்கே திரும்பி வந்துவிடுமோ என்று பயப்படுகிறேன் அண்ணா. என் அன்புத்தெய்வம் போன்ற அண்ணன் விடிந்தும் விடியாததுமாக எங்கே என்னிடம் ஓடிவந்து விடுவாரோ என்று பயந்துதான் நிர்மலா மிஸியைக் கூட்டிக்கொண்டு வந்தன். அவர்கள் 'டியூட்டி' முடிந்து போகும் போது எனக்குத் துணையாக வருவதாகக் கூறினார் டாக்டரும் காய்ச்சலோடு நீங்கள் அலையாமல் இருப்பதற்கு அதுதான் நல்ல யோசனை என்றார் அவருடைய அநுமதியினை பெற்றுன் இருவரும் புறப்பட்டு வந்தோம். டாக்ஸிக்குக் கூடப்பணம் மிஸிதான் கொடுத்தா'' என்று பவானி தான வந்த விபரத்தைக் கூறியபோது ரகுவுக்கு ஒரு சொட்டு நிம்மதியேற்பட்டதாயினும் நிர்மலாவோடு அவள் வந்தது அவனுக்குப் பிடிக்கவில்லை. நிர்மலாவோடு அவள் வந்தது கவுறென்றோ அல்லது தன் கௌரவம் குறைந்து விடுமென்றோ அவன் எண்ணவில்லை. அதற்கு மாறாக தன்னைப் பற்றி ஒரு தாழ்ந்த அபிப்பிராயம் அவள் மனதில் பதிந்துவிடுமென்றே அவன் அஞ்சினான். அவளிடம் பவானி தன்னைப்பற்றி அவ்வளவு உயர்வாகக் கூறியிருக்கும்போது அவள் கேவலமாக நினைப்பதற்குத் தான் இடமளித்துவிட்டானே என வருந்தினான்.

ஆயினும் தன் உள்ளக் கிடக்கையை வெளியேகாட்டாமல் 'இரவு முழுவதும்

கண் விழித்து வேலை செய்தவர்களுக்கு நீ வேறு தொல்லை கொடுத்துவிட்டாய். எங்கே அவர்கள் போய்விட்டார்களா...'' என்று நிர்மலாவுக்காகப் பரிந்து பேசினான். இல்லையண்ணா... மிஸி வெளியேதான் இருக்கிறா. உங்கள் சுகத்தையும் பார்த்து விட்டுப் போகலாம் என்தான் இருக்கிறா. ஆமாம்! நீங்கள் மிஸி தந்தமருந்து குடித்தீர்களா...? என்று தொடர்ந்து கேட்டாள் பவானி.

'குடித்தேன்' என்று பவானியின் கேள்விக்குப் பதிலளித்த ரகு அவள் கையிலிருந்த பொருட்களையெல்லாம் வாங்கி அறைக்குள் ஒரு பக்கமாக வைத்து விட்டு முன்பும் நோக்கி நடந்தான். அங்கே நிர்மலா ஒரு நற்காலியில் அமர்ந்து ஏதோ ஒரு பத்திரிகையில் ஆழ்ந்திருந்தாள் ''டவானி உங்களை அதிகம் சிரமப்படுத்தி விட்டாள் என நினைக்கிறேன். அவள் சார்பில் உங்களிடம் நான் மன்னிப்புக் கோருகிறேன். அவள் எப்போதும் இப்படித்தான் ஒரு சின்னக் குழந்தை மாதிரி. யாராவது அளவுகடந்த அன்பு காட்டினால் தானும் அளவுகடந்த உரிமையோடு பழகிவிடுவாள்...''

அப்போதுதான் நிர்மலா அவனை நிமிர்ந்து பார்த்திருக்க வேண்டும் ''பரவாயில்லை... அவள் என்னிடம் கேட்காமலே அவளுக்கு உதவிசெய்ய வேண்டும் என என்உள்ளந்துடித்துக்கொள்கிறது. எனக்குக்கூட அவள் மேல் அப்படிஒரு பாசம் ஏற்பட்டுவிட்டது. இதற்காக யாரும் யாரிடமும் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. உள்ளங்கள் ஒன்று சேரும்போது உணர்ச்சிகள் கூட சிலவேளைகளில் ஒன்றிவிடுகின்றன. ஆமாம்! உங்கள் சுகம் எப்படி? நான் கொடுத்த மாத்திரை சாப்பிட்டீர்களா... அதன் பின் எப்படியிருக்கு என்று அவள் அவனைப் பரிவுடன் வினவிய போது அவன் உள்ளத்தை என்னவோ செய்தது. உமாவுக்குப் பின் தன்னிடம் சுயநலமற்ற முறையில் அன்பு காட்டும் இரண்டாவது ஜீவன் என நினைத்துக் கொண்டான்.

''ரொம்ப நன்றி... உங்கள் மருந்து என்னை மிகவும் விரைவில் குணப்படுத்தி விட்டது. நாங்கள் இருவருமே உங்களை அதிகஞ் சிரமப்படுத்தி விட்டோம் என நினைக்கிறேன். நீங்க ரொம்ப நல்லவங்க போல இருக்கிறது. நல்லவங்களைக் கடவுள் எப்போதும் ஆசீர்வதிப்பார். அதனால் நீங்களும் நன்றாக இருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. [illegible] மாங்கல்யப் பாக்கியம் பெற்றுப் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ வேண்டுமென ஆசீர்வதிக்கிறேன் என்றான். அப்போது நிர்மலா பலமாகச் சிரித்தாள். அந்தச் சிரிப்பை அவனால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

உங்கள் வாழ்த்துக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். பவானி எங்கே... சொல்லிவிட்டுப் புறப்படலாம் என நினைக்கிறேன். என்று கூறிவிட்டு அவள் எழுந்து கொள்ள முயன்ற போது ''இருங்கள் போகலாம்... அதற்குள் ஏன் அவசரப்படுகிறீர்கள். எங்கள் வீட்டுக்கு வந்தவர்கள் ஒரு கோப்பை தேநீராவது அருந்தக் கூடாதா...? நாங்கள் ஏழைகள். அதைவிட வேறு எதைத்தான் உங்களுக்கு நாங்கள் செய்ய முடியும் என்றான் ரகு. அவன் விகடமான பேச்சைக் கேட்டு அவள் அடக்கமாகச் சிரித்தாள். 'இந்த வீட்டில் உள்ளவர்களே இருவர்தான். அந்த இருவருமே நோயாளிகள். தாதியாகக் கடமையாற்றும் நான் உங்களை அப்படியெல்லாம் சிரமப்படுத்தக் கூடாது. உங்கள் விருப்டப்படி வேண்டுமானால் இன்னும் சிறிது நேரம் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கிறேன். ஆனால் தேநீர் வேண்டாம். டிஸ்பென்ஸரியில் இருந்து புறப்படும்போதுதான் நான் குடித்தேன். உங்கள் வீட்டில் இன்னுமொரு நாளைக்குக் குடிக்கிறேன்' என்றாள் நிர்மலா.

அதற்குமேல் ரகுவும் அவளை வற்புறுத்தவில்லை. சிறிது நேரத்தில் பவானியும் அங்கே வந்து அமர்ந்து கொள்ள மூவருமாகச் சில நிமிடநேரம் பேசிக்கொண்டிருந்தனர். அப்போதுதான் நிர்மலாவும், ரகுவும் முதன் முறையாக மனம் விட்டுப் பேசிக்கொண்டனர். நிர்மலா அவர்களிடமிருந்து விடைபெற்றுச் சென்றதும் ரகுவும் பவானியும் பல நாட்கள் பிரிந்திருந்த துயர்திரப் பேசிக்கொண்டிருந்தனர்.

பவானிக்குப் பூரணமாக உடல்நிலைதேறி வாரங்கள் இரண்டுக்கு மேற் சென்று விட்டன. ரகுவும் பழையபடி ஒழுங்காக வேலைக்குப் போகத் தொடங்கியிருந்தான். அவனது தற்போதைய கவலையெல்லாம் பவானியைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. எப்படியாவது பவானி சுகமாகப்பெற்றுப் பிழைத்துவிடவேண்டும் என உள்ள தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டான். அவன் ஒரு நாள் கதையோடு கதையாக விளையாட்டுப் போல ரகு பவானியிடம் அவள் கணவன் பெயரைக் கேட்டுவிட்டான். அந்த விநா அவள் கண்களில் நீரை வாரிச்சொரிந்தபோது அவன் திடுக்கிட்டான். 'என்னை மன்னித்துவிடு தங்கச்சி உன் மனதைப் புண்படுத்தவேண்டும் என்ற நோக்கமே எனக்கு அடியோடு இருக்கவில்லை. ஆயினும் நாளைக்கு உனக்கு ஒரு மகன் பிறந்தால் அந்தச் சுப செய்தியை அவருக்கு அறிவிப்பது என் கடமையாக இருக்கும் என்றுதான் கேட்டேன். சரி, அது உனக்குப் பிடிக்காவிட்டால் உனக்கு வேண்டிய உறவினர்களின் பெயரையும் முகவரியையுமாவது கூறு. தற்செயலாக நாளைக்கு எனக்கு ஏதாவது கெட்டது நடைபெற்றால் நீ நடுத்தெருவில் நிற்கக் கூடாது, என்று விளக்கங் கொடுத்து அவளைச் சமாதானப்படுத்த முயன்றான் ரகு.

பவானியும் பிள்ளைப்பேறடையும் நாட்களை அணுகிவிட்டாள். இன்னும் பதினைந்து நாட்களில் அவளுக்குச் சுகப்பிரசவமாய் விடுமென டாக்டர் கூறியிருந்தார் ரகு அவளை மிகவும் கண்ணும் கருத்துமாகப் பேணிக்காத்து வந்தான். டாக்டர் கட்டளையிட்டபின் அவரது புத்திமதியையேற்று வேலைக்குப் போவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தாள் பவானி. ஆனால் அவளது வீட்டு எஜமானி அவளை எப்போதும் திருப்பி ஏற்றுக்கொள்ளச்சித்தமாக இருந்தால் தன் மகப்பேற்றின் பின் மீண்டும் வேலைக்குச் செல்லவேண்டுமெனத் தீர்மானித்திருந்தாள். ரகுவைப்போல அவளும் குழந்தையின் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தாள்.

தன் தாய்மைப் பேற்றை நினைத்து அவள் பூரிப்படைந்த போதும் அந்தப் பூரிப்பு அவளிடம் நிரந்தரமாக நிலை கொள்ளத்தக்கதாக இருக்கவில்லை. தன் வயிற்றில் கடந்த பத்துத் திங்களாக எத்தனையோ கஷ்டங்களின் மத்தியில் வளர்ச்சி பெற்று வந்திருக்கும் சிசு நேர்மையான முறையில் பெறப்பட்டதாக இருந்திருந்தால் அவளது மகிழ்ச்சி எல்லை கடந்ததாக இருந்திருக்கும். ஆனால் அவள் வயிற்றில் வளர்ந்திருப்பது ஒரு அவமானச் சின்னம் என்பது அவளறிந்த உண்மை. அவள் உயிர் உள்ளவரைக்கும் அவளுக்கு ஒரு பாவச்சின்னமாக அது அமைந்துவிடப் போகிறது. அந்தக் குழந்தை வளர்ந்து பெரிதாகியதும் தன் தகப்பனைக் காட்டச் சொல்லிக் கேட்டால் அவள் என்ன பதில் கூறமுடியும்...?

தந்தை பெயர் தெரியாத குழந்தை என்று ஊரும் உலகமும் பேசிக் கொள்ளும் போது அவர்கள் வாயை அவள் எப்படி அடக்க முடியும்? அந்தக் குழந்தை, ஒரு பெண்குழந்தையாகி பெண்மையின் பெருமையைப் போற்றக் கூடிய தன்மையும் உடையதாக வளர்ந்துவிட்டால் தன்னைப் பெற்ற தாயைப்பற்றி அது எவ்வளவு கேவலமாக நினைத்துக் கொள்ளும் என்றெல்லாம் எண்ணிப்பார்க்க அவளுக்கு அழவேண்டும் போல இருந்தது.

வருங்காலத்தை நினைத்துப் பார்த்தபோது அந்தக் குழந்தை பிறக்கும்போதே இறந்துவிட்டால் தேவலை போல இருந்தது பவானிக்கு ஆயினும் அவளது தாய்மை குமுறியது. குழந்தை எப்படிப் பிறந்தாலும் அவள் தாயாகி விட்டாள். அந்தத்

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மு. மார்க்குப்பிள்ளை,
பில்லைத்திவு.

கே: வகுப்புவாதத்தைக் கிளப்பி விட்டு அரசியல் வேட்டை ஆட எண்ணிய ஆர். ஜி. சேனநாயக்கா தென் இலங்கையில் நடத்தும் பிரசாரங்களில் எம்.ஜி.ஆர். நடித்தபடங்களை தடை செய்தும் தமிழ் படங்கள் வருவதை மட்டுப்படுத்தவும் இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்துகிறுரே இவர் எம்.ஜி.ஆரின் விவசாயி என்னும் பாடலை நன்கு புரிந்து கொண்டால் என்ன கூறுவார்?

ப: புரிந்துகொண்டாலும் புரிந்ததுபோலக் காட்டிக் கொள்ளமாட்டார். ஏனெனில் எம்.ஜி.ஆர். படங்களுக்கு எதிராக சிங்களவர் மததியில் கிளர்ச்சி தோற்றுவிக்கப்படுவதற்கு ஒரு முக்கிய காரணம் எம்.ஜி.ஆர். மீது சிங்கள மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தவே. எம். ஜி. ஆர். படங்களுக்கு பெரும்பாலும் செல்பவர்கள் சிங்கள ரசிகர்கள். இந்த சிங்கள ரசிகர்களை சிங்களப் படங்களுக்குதிருப்புவதற்சே எம்.ஜி.ஆர். மீது வசை புராணம் பாடப்படுகிறது.

ஃ

என். இராமலிங்கம்.
உடுப்பிட்டி.

கே: தமிழ் காங்கிரஸ் கொடி போடப்பட்டுள்ள காரில் ஏறுவதற்கு சமசமாஜப் பிரமுகரான திரு. தர்மரத்தினம் மறுத்தபடியால், எங்கள் உடுப்பிட்டி எம். பி. தனது காரிலிருந்த தமிழ் காங்கிரஸ் கொடியை முற்ருக அகற்றிஞராமே, இது எதைக்காட்டுகிறது?

ப: ஒருவரின் பிடிவாதத்துக்காக கட்சிக்கொடியை அகற்றியவர் ஒன்பதுபேர் வற்புறுத்திஞல் கட்சியையே குழிதோண்டிப் புதைத்துவிடுவாரென்பதைக் காட்டுகிறது!

ஃ

த. ம. ஈழவர்மன்,
கொழும்பு—1

கே: இலங்கைத் தமிழர்களின் எதிர்காலம் யாரிடம் தங்கியுள்ளது?

ப: வேறு யாரிடமுல்ல, தமிழர்களிடமே தங்கியுள்ளது.

கே: தமிழரசார் அரசாங்கத்திலிருந்து வெளியேறியது பற்றி தனிப்பெருந்தலைவர் என்ன நினைப்பார்?

ப: இவர்கள் இப்போது வெளியேறி என்ன பயன்? முன்பே வெளியேறியிருந்தால் உள்ளே புகுந்து காலில் விழுந்து ஏதாவது எச்சில் பருக்கைகளைப் பொறுக்கியிருக்கலாமே என்று ஏக்கப் பெருமூச்சுவிட்டிருப்பார்!

கே: செல்வநாயகம் அவர்கள் அரசியலிலிருந்து விலகிவிட்டால்...?

ப: அவர் விலகிஞலும் அவர் கட்டி வளர்த்த கட்சி வெற்றி நடைபோடும்!

கே: சிந்திக்கும் ஆற்றலற்றவன் யார்?

ப: தமிழ் காங்கிரசை ஆதரிப்பவன்!

பொன்னையா
யாழ்ப்பாணம்.

கே: தமிழினத்தின் முதல் நம்பர் விரோதி யார்?

ப: தீண்டாமை. இந்த ஆமைதான் உள்ளிருந்தே தமிழினத்தை பிளவு படுத்தி அழித்துக் கொண்டிருக்கிறது! தீண்டாமையை ஒழிப்பதையே ஒவ்வொரு தமிழனதும் முதல் வேலையாக இருக்க வேண்டும்!

ஃ

ப. ஆறுமுகதிலகர்
காரைநகர்.

கே: தமிழரசுக்கட்சியின் அறப்போராட்டம் எப்போது ஆரம்பமாகும்?

ப: மக்களைத் தயார்படுத்தி போராட்டத்திட்டங்கள் வகுக்கப்பட்டபின்னர்!

கே: அன்புக்கும் காதலுக்கும் உள்ள வேறுபாடு யாது?

ப: அன்பு சுயநலமற்றது; காதல் சுயநலம் கலந்தது.

கே. கந்தசாமி,
உடுவில்.

கே: உடுவில் தொகுதியில் அடுத்த பொதுத் தேர்தலில் பொன்னம்பலம் தனது மகனைத் தேர்தலுக்கு நிறுத்தம் போகிருராமே!

ப: அப்படியா? சிவனேசனும் நாவேந்தனும்தான் பரிதாபத்துக்குரியவர்கள். அவர்களுக்கு இப்படியொரு பெரிய பட்டைநாமத்தை பொன்னம்பலம் போடலாமா?

கே: சாவகச்சேரியில் வி. குமாரசாமி தமிழ் காங்கிரசில் போட்டியிடப்போகிருராமே!

ப: போட்டியிடட்டுமே! பொன்னம்பலம் மந்திரிப் பதவியிலிருந்து உதைத்துத் தள்ளப்பட்ட பின்னர் கூட மானங்கெட்டு வாலறுந்த நரியாக அரை மந்திரி பதவியில் ஒட்டிக்கொண்டிருந்த பழைய சங்கதிகளையெல்லாம் மக்கள் மறந்துவிட்டார்களா என்ன?

ஃ

எம். சந்தையா,
பூண்டுலோயா.

கே: அறிஞர் அண்ணு மறைந்ததால் தி.மு.க.வுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டுள்ளதா?

ப: இல்லையே! கலைஞர் கருணாநிதி மெல்ல மெல்ல அண்ணுவின் இடத்தைப் பிடித்து வருகிருர்!

கே: நாவலர் நெடுஞ்செழியனின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

ப: நிச்சயம் இருள் சூழ்ந்துவிடாது!

ஃ

எம் பிரபாகரன்,
இணுவில்.

கே: தமிழ் என்ருல் என்ன?

ப: ஆறு கோடி அடிமைகள் பேசும் ஒரு மொழி!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி
கொழும்பு—12

தமிழாராய்ச்சி மாநாட்டில்

# மீசை முறுக்கி வந்த ம. பொ. சி.

தமிழ்வெறியர்— என்று ஆராய்ச்சி மாநாட்டு அரங்கேறி அதுவும் அதை ஒரு தமிழன் கூறியபோது ம. பொ. சி யின் மீசை துடித்தாலும் அந்தத் துடிப்பு, உள்ளத் துடிப்பினில் எழுந்த உணர்ச்சிப் பாட்டிலே, இனிய இசையிலே இடம் பெறவில்லை. ஆயினும்—

ம. பொ. சி தனது மீசையை முறுக்கிக் கொண்டு கம்பீர நடை போட்டு ஆராய்ச்சி அரங்கினுள் ஏறுபோற் சென்ற காட்சி சீர்காழி கோவிந்தராசனின் அமுத கானத்தில் இடம்பெற்றதை இதுவரை மாநாடு பற்றி ஆண்டுக்காலமாக அலட்டிய எவருமே குறிப்பிடவில்லை.

தமிழின் வீரம், எழுச்சி, இனிமை பற்றி மாநாட்டின் மூன்ரும் நாளின் போது கலை அரங்கில் சீர்காழி பாடிகொண்டிருந்தார்.

சந்தனமே அமுதமே வணக்கம்
தாய்த் தமிழே வணக்கம்

என்ற இசை எழும்பியபோது, ஏறு நடை போட்டு உள்ளே நுழைந்தனர் ம. பொ. சி. புரட்சிக் கவி பாரதியைப் பற்றிப்பாட ஆரம்பித்தார் சீர்காழி.

'மீசை முறுக்கி வந்த பாரதியே வணக்கம்'

என்று பாடிக் கொண்டிருந்த அவர் தனக்கு எதிரே மீசையைத் தடவிக்கொண்டு வரும் ம. பொ. சியைக் கண்டதுதான் தாமதம் தனது பாடலில் அடுத்த அடியை

'மீசை முறுக்கி வந்த ம. பொ. சியே வணக்கம்
தாய்த் தமிழே வணக்கம்'

என்று எடுத்து தொடுத்துத் பாடிய போது அவையோரின் கர ஒலி அரங்கையே அதிர வைத்தது.

மறவர் நாட்டை மாற்ருர் முற்றுகையிட்டபோது, தமிழ் இனத்தின் வீரத்தைப் பிற இனத்தார் பழித்துப் பேசியபோது, மண்ணதிர விண்ணதிர மாற்ருர் மனமதிர முரசு முழங்கியது'' என்று பட்டி தொட்டியெல்லாம் மூலை முடுக்கெல்லாம் மேடையேறியும், எழுத்திலும்முழங்கிய ம. பொ. சி யின் மீசை முறுக்கே அன்று அந்த அரங்கை அதிரவைத்துவிட்டது.

—க. நவசோதி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## 'மே' திருநாள்

இன்று 'மே' திருநாள். உலகெங்கும் குதூலகத்துடன் கொண்டாடப்படும் ஒப்பற்ற தொழிலாளர் திருநாள்.

உழைக்கப் பிறந்தவன் ஒருவன்—அவனது உழைப்பை உறிஞ்சப் பிறந்தவன் மற்றொருவன் என்ற கோட்பாடு சுட்டுப் பொசுக்கப்பட்ட உன்னத பெருநாள். ஆளப் பிறந்தவன் ஒருவன்—அடிமையாக மாளப் பிறந்தவன் ஒருவன் என்றிருந்த அநீதி துடைக்கப்பட்ட நன்னாள்!

அடக்கப்பட்டவன் எப்பொழுதுமே அடங்கியிருக்க மாட்டான்—நசுக்கப்படுபவன் என்றுமே தன்னை நசுக்க அனுமதித்துக் கொண்டிருக்க மாட்டான். அடக்கப்படுபவனும் நசுக்கப்படுபவனும் ஒருநாள் பொங்கி எழும்போது ஆதிக்கக்காரனின் இரும்புக்கரம் பொடிப் பொடியாகும் என்பதையே மே தினம் எடுத்துக் கூறுகிறது.

உலகில் எங்கெல்லாம் அநீதிக்கு எதிரான போராட்டங்கள் நடக்கின்றனவோ—எங்கெல்லாம் அக்கிரமக்காரர்களை எதிர்த்து உரிமைக் கிளர்ச்சிகள் நடக்கின்றனவோ—எங்கெல்லாம் விடுதலைக்குரல் பீறிட்டுக் கிளம்புகிறதோ—அங்கெல்லாம் மே தினம் புதிய நம்பிக்கையையும் எழுச்சியையும் ஏற்படுத்துகிறது.

இத்தகைய பெருமைவாய்ந்த மேதினம் உலகமெங்கும் மே முதல் தேதியாகிய இன்று வழமைபோலக் கொண்டாடப்படும்போது, நம்நாட்டில் மட்டும் மேமுதல் நாளில் மேதினம் கொண்டாடுவதற்கு தடைவிதிக்கப்பட்டிருக்கிறது. இத்தடைக்கு காரணம், மேதினமும் பௌத்தர்களின் வெசாக் பண்டிகையும் ஒன்ருகவந்ததுதான் என்று காரணமும் காட்டப்பட்டிருக்கிறது.

பௌத்தர்களுக்கு 'வெசாக்' ஆண்டுக்கு ஒரு முறை வரும் ஒரு புனிதமான திருநாள் என்பது உண்மைதான். ஆனல் அதற்காக அன்றையதினம் தொழிலாளர் தினமாகவும் அமையக்கூடாதென்று ஏதாவது சட்டம் இருக்கிறதா என்ன? பௌத்தம் தொழிலாளர்களது உரிமையை வழங்காதேயென்று எப்பொழுதாவது கூறியதாகவும் தெரியவில்லை.

'வெசாக்' விழா நடைபெறும் பகுதிகளில் மட்டும் வீண் குழப்பங்களையும் மோதல்களையும தவிர்ப்பதற்காக இத்தகையதொரு தடையை அரசாங்கம் விதிப்பதைக் கூட ஒருவரால் புரிந்து கொள்ள முடியும்.

ஆனல் நூற்றுக்கு தொண்ணூற்றைந்து வீதம் பௌத்தர்களல்லாதார் வாழும் யாழ்ப்பாணத்திலும் மே முதல் நாள் கூட்டம் நடத்த தடை விதித்திருப்பது, பாராளுமன்றத்தில் தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் சுட்டிக் காட்டியிருப்பது போல ஏதேச்சாதிகாரமான ஒரு நடவடிக்கையென்பதில் துளியும் சந்தேகமில்லை.

மக்களின் சனநாயக உரிமைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் பொலிஸ் அதிபரின் இத் தடையுத்தரவை மீறி மே தினத்தை இன்று யாழ்ப்பாணத்தில் நடத்தவிருந்த தமிழரசுக் கட்சி, ஆழ்ந்த ஆலோசனையின் பின்னர் பௌத்த மக்களின் மத உணர்ச்சிக்கு மதிப்பளித்து அவர்களது வேண்டுகோளை ஏற்று தனது திட்டத்தை இறுதி நேரத்தில் மாற்றியமைத்து விட்டது.

இந்நாட்டிலுள்ள பௌத்த சங்கங்களும் பௌத்த பிக்குகளும், தமிழரசுக் கட்சி தலைவர்களுக்கும் தமிழினத்துக்கும் எதிராக எவ்வளவு தூரம் கேவலமான பிரசாரத்தை நடத்தினர்—நடத்தி வருகின்றனர் என்பது நாடறிந்த ஒன்று. மாவட்டசபை மசோதாவை முறியடிப்பதில் கூட முன்னணி வகித்தவர்கள் பௌத்த பிக்குகளும், பௌத்த ஸ்தாபனங்களும் தாம்.

இருந்தபோதிலும், பௌத்த மக்களின் மத உணர்ச்சியை மதித்து, தனது நடவடிக்கை மூலம் தமிழரசுக் கட்சி நல்லெண்ணக்கரங்களை மீண்டும் நீட்டியிருக்கிறது. இந்த நல்லெண்ணம் பௌத்தர்களின் மனதில் எவ்வளவு தூரம் தைத்திருக்கிறது என்பதை எதிர்காலம்தான் காட்ட வேண்டும்.

இந்நாட்டில் ஆண்டுதோறும் நடைபெறும் மேதின கொண்டாட்டங்களுக்கு அளவுமில்லை; கணக்குமில்லை. ஆனல் தொழிலாளியின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்குத்தான் எந்த வழிவகையும் காணப்படவில்லை.

இந்நாட்டின் ஏற்றத்துக்காக உழைத்துழைத்து ஓடாகிப்போன மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளி அன்றாடச் சோற்றுக்கே போதிய ஊதியமின்றி தினமும் செத்துக் கொண்டிருக்கிறன். அவனுக்கு பிரஜாவுரிமையுமில்லை. அவனது பிள்ளைகள் ஒழுங்காக நாலெழுத்துப் படிக்க கல்வி வசதியுமில்லை. அதைப் பற்றி யாரும் கவலைப்படுவதாகவுமில்லை

தமிழ் பேசும் மக்கள் ஒற்றையாட்சியின்கீழ், சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு அடிமைகளாக வாழ மட்டும் இந்நாட்டுத் தமிழ் பேசும் தொழிலாளர்களுக்கு நல்வாழ்வு கிடைக்க எவ்வித வழியுமில்லை.

எனவே உரிமைகள் பறிக்கப்பட்டு—விரக்தியின் எல்லைக் கோட்டுக்குத் தள்ளப்பட்டுவிட்ட தமிழ் பேசும் மக்கள், சமஷ்டி அமைப்பின்கீழ் தங்கள் சொந்தச் சோஷலிச சுயாட்சித் தமிழரசை நிறுவி இன விடுதலையைப் பெற 'மே' திருநாளில் சபதமெடுத்துக்கொள்வார்களாக!

# இலங்கை தமிழர் நிலை

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வடக்கு கிழக்கு மாநிலங்களிலே எல்லையற்ற செல்வாக்கு இருக்கிறது. தனது உழைப்பாலும் தியாகத்தாலும் அத்தகைய செல்வாக்கைத் தேடிக் கொண்டிருக்கிறது தமிழரசுக் கட்சி. ஆகவே, சோதனை மிக்க இந்த நேரத்தில் மிகவும் துணிவு காட்டி ஆளுங்கட்சியிடமிருந்து பிரிவதென்று முடிவெடுத்ததற்காக அதனை யாரும் குறை கூறுவதற்கில்லை.

ஆனல், இனிமேல் அது கடைப்பிடிக்கவிருக்கும் நடைமுறை என்ன? உடுவில் மாநாட்டுத் தீர்மானப்படி அது உடனடியாகப் போராட்டத்தில் இறங்கித்தான் ஆகவேண்டுமா? இறங்குவதால் தமிழ் இனத்தவருக்கு நன்மை விளையுமா? இவற்றை ஆழ்ந்து சிந்தித்தாக வேண்டிய அவசியமிருக்கிறது. பண்பும் பாரம்பரியமும் மிக்க பெருந்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், தமிழரசுக் கட்சிக்கு வழிகாட்டியாக விளங்குகின்றார். உணர்ச்சித் துடிப்பும், தியாகத் தழும்பேறிய வரலாறும் படைத்த திரு. இராசமாணிக்கம் தமிழரசுக்கட்சியின் தலைமைப் பொறுப்பை இந்த ஆண்டில் ஏற்றிருக்கிறார்.

முன்னாள் தலைவர் டாக்டர் நாகநாதன் போன்ற அனுபவமிக்க அரசியல்வாதிகளும் தமிழரசுக் கட்சிக்கு ஆலோசனை கூறி வருகின்றனர்.

இளமைத் துடிப்பும் எதற்கும் அஞ்சா நெஞ்சுரமும் பெற்றவர்களான திரு. அமிர்தலிங்கம், திரு. இராசதுரைபோன்ற இளந்தலைவர்கள் தானைத் தளபதிகளாக இருந்து செயல்பட்டு வருகின்றனர். இவர்கள் அத்தனை பேரும் தமிழரசுக் கட்சி வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டம்பற்றி மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் சிந்திக்க வேண்டும்.

இலங்கை வாழ் தமிழர்களின் பிரதிநிதித்துவமிக்க அரசியல் அமைப்பாக இயங்கிவரும் தமிழரசுக் கட்சியின் வருடாந்தர மாநாடு யாழ்ப்பாண மாநிலத்தில் உள்ள உடுவில் கிராமத்தில் ஏப்ரல் 7, 8, 9 தேதிகளில் வெகு சிறப்பாக நடந்து முடிந்திருக்கிறது. இந்த மாநாட்டிலே, ஜனநாயக உலகத்தின்—குறிப்பாக இந்தியப் பெருநாட்டின்—சிறப்பாக, இந்தியத் தமிழகத்தின் கருத்தைக் கவரக்கூடிய அரசியல் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

1965 முதல் இலங்கை ஐக்கிய தேசியக்கட்சி (யூ. என். பி.)யின் ஆட்சிக்கு அளித்து வந்த ஆதரவை கைவிடுவதென்பது அந்தத் தீர்மானம். அத்துடன், இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைக் காக்க விரைவில் போராட்டத்தில் ஈடுபடுவதென்றும் தமிழரசுக் கட்சி மாநாடு தீர்மானித்திருக்கிறது.

இலங்கை ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் உறவு ஏற்பட்ட விதத்தையும், அந்த உறவு முறிய வேண்டி ஏற்பட்டதன் அவசியத்தையும் இங்கு அறிந்து கொள்வது நலம்.

1965ந்தாம் ஆண்டிலே இலங்கைப் பாராளுமன்றத்திற்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில், எந்த ஒரு அரசியல்கட்சிக்கும் நிகர பெரும்பான்மை கிடைக்கவில்லை. அதனல், பிரதான கட்சிகளாக விளங்கும் சிறிமாவோ பண்டாரநாயகாவின் இலங்கை சுதந்திரக்கட்சியும் சேனநாயகாவின் ஐக்கிய தேசியக் கட்சியும் போட்டி போட்டுக்கொண்டு, பதினன்கு தொகுதிகளில் வெற்றி பெற்ற தமிழரசுக் கட்சியின் ஆதரவைக் கோரின. இந்த இரண்டு கட்சிகளிடமும் கடந்த காலத்தில் தனக்கு ஏற்பட்டுள்ள அனுபவத்தைக் கருத்தில் கொண்டு, டட்லி சேனநாயகாவின் கட்சிக்கே ஆதரவளித்தது தமிழரசுக் கட்சி. இலங்கைவாழ் தமிழர்களின் நலன்கள் சிலவற்றை நிறைவேற்றித்தர ஐக்கிய தேசியக் கட்சி ஒப்புக்கொண்ட தன் பேரிலேயே அதன் ஆட்சி தோன்றுவதற்கு இசைந்தது தமிழரசுக் கட்சி.

திரு. திருச்செல்வம் என்பவர் டட்லி சேனநாயகாவின் அமைச்சரவையில் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதியாக இடம் பெற்றார். இதனல், கம்யூனிஸ்டுக் கட்சிகளின் ஆதரவுடன் இயங்கும் இலங்கை சுதந்திரக் கட்சி ஆட்[illegible] டது. தவிர்த்த பொறுப்பு தமிழரசுக் கட்சிக்கே உரித்தானது.

நாளடைவில் டட்லி சேனநாயகா ஆட்சியின் போக்கு தமிழரசுக் கட்சிக்கு மனநிறைவைத் தரக்கூடியதாக இல்லை. திருக்கோணமலையிலுள்ள கோணேசுவரர் ஆலயத்தை இந்துக்களின் பிரதான வழிபாட்டுத்தலம் எனப் பிரகடனம் செய்வதற்கு அமைச்சர் திருச்செல்வம் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார். பிரதமர் டட்லி சேனநாயகா அதற்கு ஆதரவாக இல்லை.

இதில் ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் கடந்த ஆண்டு செப்டம்பர் திங்களிலே திரு. திருச்செல்வம் அவர்களை அமைச்சரவையிலிருந்து திரும்பப்பெற்றது தமிழரசுக்கட்சி. அதன் பின்னரும் டட்லி சேனநாயகாவின் ஆட்சிக்கு இலங்கை பாராளுமன்றத்திலே தொடர்ந்து ஆதரவளித்து வந்தது.

அதன்பின்னரும், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் போக்கு தமிழ் இனத்தவருக்கு உதவிகரமாக இல்லை.

தமிழர் பெரும்பாலோராக வாழும் வடக்கு கிழக்கு மாநிலங்களிலே ஸ்தல சுயாட்சியை நிறுவுவதாக ஐக்கிய தேசியக் கட்சி கொடுத்திருந்த உறுதிமொழி நாணயமாக நிறைவேற்றப்படவில்லை. அந்த இரண்டு மாநிலங்களிலே தமிழைப் பிரதான ஆட்சிமொழியாகச் செய்வதிலேயும் போதிய அக்கறை காட்டவில்லை சேனநாயகா ஆட்சி. அதே நேரத்தில், சிங்கள மொழி ஒன்றை மட்டுமே இலங்கையின் ஆட்சிமொழியாக்குவதிலேயும் அந்த மொழியைப் படிக்குமாறு தமிழர்களை நிர்ப்பந்திப்பதிலேயும் அவசர உணர்ச்சி காட்டிவந்தது.

இதனல், ஐக்கிய தேசியக் கட்சி—தமிழரசுக்கட்சி ஆகியவற்றிடையே உறவு நீடிப்பதை தமிழ் மக்கள் விரும்பாதவர்களாயினர் வெறுப்பு கூட வளர்ந்தது எனலாம்.

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய பின்னர் தமது செங்கோல் ஏட்டில் 'இலங்கைத் தமிழர் நிலை' என்ற தலைப்பின் கீழ் எழுதியுள்ள கட்டுரை இங்கு அப்படியே இடம் பெறுகிறது



ம. பொ. சி

இதனை நன்குணர்ந்து, தமிழ் இனத்தவரின் உணர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் சேனநாயகாவின் ஆட்சியோடு தனக்குள்ள தொடர்பைத் துண்டித்துக் கொள்ளத் தீர்மானித்துவிட்டது தமிழரசுக் கட்சி. இந்த முடிவு இலங்கை வாழ் தமிழ் மக்களில் மிகப் பெரும்பாலோரால் வரவேற்கப்படுகிறது. இனி, இலங்கைப் பாராளுமன்றத்திலே சுதந்திரமுள்ள எதிர்க் கட்சியாக தமிழரசுக் கட்சி இயங்கும்.

தமிழரசுக் கட்சியின் இந்த முடிவை ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி விரும்பாமலிருக்கலாம் — விரும்பவும் இல்லை. ஆயினும், தனது சிங்கள வெறிப் போக்கின் காரணமாகத்தான் தன்னிடமிருந்து பிரிந்து போக வேண்டிய நிர்ப்பந்தநிலை தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டதென்பதனை அக் கட்சி உணர்ந்துதான் இருக்கின்றது.

தனிப்பட்ட முறையில் பிரதமர் டட்லி சேனநாயகா மிகவும் நல்லவர் என்றுதான் சொல்லப்படுகிறார். ஆனல், தனது கட்சியினரின் சிங்கள வெறிப்போக்கை தணிக்கை செய்ய அவரால் இயலவில்லை. மேலும், ஐக்கிய தேசிய கட்சிக்கு சிங்களப் பொது மக்களோடு நெருக்கமான தொடர்பிருக்கவில்லை. அதனல், தன் மனச்சாட்சிப்படி, நான்காண்டுகளுக்கு முன்பு தமிழரசுக் கட்சிக்குக்கொடுதத உறுதிமொழிகளை நிறைவேற்றிவைக்கும் சூழ்நிலை பிரதமர் சேனநாயகாவுக்கு இல்லை. அவர் ஒரு தரும சங்கடமான நிலையில் ஆட்சி புரிந்து வருகின்றார். அவர் எவ்வளவுதான நல்லவராயினும், ஒரு தனி மனிதரின் நட்புக்

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அன்புள்ள தோழா

இன்று மே திருநாள்: தொழிலாளர்களை ஏய்த்து அவர்களது இரத்தத்தை உறிஞ்சி சுகபோக வாழ்வு அனுபவித்து வந்த முதலாளி வர்க்கத்துக்கு சவால் விடுக்கப்பட்ட திருநாள். அஞ்சி அடங்கி, கோழைகளாய், மோழைகளாய் வாழ்ந்த பஞ்சைப்பராரிகள் பொங்கியெழுந்து தமது உரிமையை நிலைநாட்டிய பொன்னாள். உழைக்கவென்றே பிறந்தது ஒரு கூட்டம் — உண்டு கொழுக்கவென்றே தோன்றியது பிறிதொரு கூட்டம் என்ற பித்தலாட்ட நம்பிக்கையை உடைத்தெறிந்த புரட்சித்திருநாள்! இப்பெருநாளில் நண்பா, உன்னுடன் சேர்ந்து மகிழ்ச்சிப் பூரிப்பில் நானும் திளைக்கிறேன்.

நண்பா, அடக்கியொடுக்கப்படுபவர்கள் ஒரு நாள் பொங்கியெழத்தான் செய்வார்கள்; அப்படிப்பொங்கியெழும்போது ஆதிக்கம் செலுத்துவோர் — எத்தனை ஆள் அம்புகளுடன் ஆட்சி செலுத்தினாலும் — தூள் தூளாவது நிச்சயம் என்பதை மேதினம் அறிவுறுத்துகிறது.

ஆமாம் தோழா, அடக்கப்படுபவர்கள், நசுக்கப்படுபவர்கள்—உரிமை மறுக்கப்படுபவர்கள் மேதினம் கொண்டாடும் போதுதான் அதிலே சூடும் சுவையும் பயனும் பிறக்கிறது. இந்தநாட்டிலே,

குடியுரிமை
மொழியுரிமை
பிரதேச உரிமை
கல்வியுரிமை
தொழிலுரிமை
மதவுரிமை
ஆட்சியுரிமை

போன்ற சகல அடிப்படை உரிமைகளும் பறிக்கப்பட்டு நசுக்கப்பட்டு - வேதனையின் விளிம்பில் நின்றபடி விடுதலைக்குரல் எழுப்பிவரும் 25 இலட்சம் தமிழ் பேசும் மக்கள் 'மேதினத்தில்' சுயாட்சி பெறுவது என்ற தங்கள் உறுதிப்பாட்டை சிங்கள ஏகாதிபத்தியத்துக்கும், அகில உலகத்துக்கும் தெளிவாக உணர்த்த இருக்கிறார்கள்.

நண்பா, இதில் வேடிக்கையென்னவென்றால், இந்த நாட்டிலே தமிழினத்தை நசுக்கி அடக்கியொடுக்கி அழித்து சர்வ சிங்கள ஏகாதிபத்தியத்தை கட்டியெழுப்புவதையே மூலாதார நோக்கமாகக் கொண்ட சிங்களக் கட்சிகளும் 'மே' தினம் கொண்டாடுவதுதான்.

இந்த நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளியின் — காடாய்க் கிடந்த மலைநாட்டை வளங்கொழிக்கும் நாடாக மாற்றியமைத்த அந்தப் பாட்டாளியின் — அவன் தமிழன் என்ற ஒரே காரணத்துக்காக — பிரஜாவுரிமை வாக்குரிமை, கல்வியுரிமை யாவற்றையும் பிடுங்கி—அவனை ஏற்று இந்தியாவுக்கு என்று நன்றிகெட்டதனமாக கூறும் சிங்களக் கட்சிகளுக்கு உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்று அறைகூவல்விடுக்க என்ன யோக்கியதை இருக்கிறது நண்பா!

இந்த இலட்சணத்தில் தான், தமிழ் பேசும் மக்களுக்கு தனித் தமிழ்க்கட்சிகள் ஏன்? தமிழ்க்கட்சிகளுக்கு ஆதரவு கொடுப்பதை நிறுத்தி தேசியக் கட்சியொன்றுக்கு தமிழ் மக்கள் ஆதரவு கொடுக்க வேண்டும் என்ற ஒரு கருத்து தூவப்பட்டுவருகிறது. ஒற்றையாட்சியமைப்பின் கீழ் சிங்கள ஏகாதிபத்தியத்தை நிறுவத் துடிக்கும் 'தேசிய' தினசரிகள் சிலவும் அதை ஆதரித்து தலையங்கம் தீட்டிவருகின்றன.

# மே திருநாளும் பாவ மன்னிப்பும்

நண்பா, முதலில் இந்த நாட்டில் தேசியக்கட்சிஎன்று கூறுவதற்கு எந்தக்கட்சிக்கு யோக்கியதை இருக்கிறது? சிங்களம் மட்டும் கொள்கையைக் கைவிடாதவரை— தமிழ்ப் பிரதேசங்களை சிங்களக் குடியேற்றங்களினால் நிரப்பும் தமது திட்டத்தை நிறுத்தாதவரை — தமிழினத்தின் தனித்துவத்தை அங்கீகரிக்காதவரை - இந்த நாட்டில் தேசியக்கட்சியென்று கூறுவதற்கு எந்தக் கட்சிக்குமே உரிமை கிடையாது!

தமிழ் பேசும் மக்களை "தேசியக்" கட்சிகளில் சேரும்படி வற்புறுத்துபவர்கள் முதலில் அக்கட்சிகளிடம் தமிழ் விரோதக் கொள்கைகளை கைவிடச் சொல்லி ஆலோசனை கூறட்டும்- தமிழ் பேசும் மக்களை அடிமைப்படுகுழியில் தள்ளிய சிங்கள மட்டும் என்ற கொள்கையை வாபஸ் பெற்று "தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து' வழங்கும்படி அறிவுரைகூறட்டும்.


அதை விடுத்து, கையில் வைத்திருக்கும் ஒரே ஆயுதத்தையும் கீழே போட்டுவிட்டு எதிரியிடம் சரணாகதியாகும்படி கூறினால் அதைக் கேட்பதற்கு தமிழ்பேசும் மக்கள் முட்டாள்களல்லர்! அரசனை நம்பி புருஷனைக் கைவிடுவதற்கு தமிழர்கள் மூடர்களல்லர்! பாழுங்கிணற்றில் கண்ணைத் திறந்தபடியே போய் விழுவதற்கு கருத்துக் குருடர்களுமல்லர்!

நண்பா, ஒரு இனம், தனது எதிர்காலத்தை— தனக்கு வழிகாட்டும் பொறுப்பை— மற்றோர் இனத்திடம் கையளிக்கமுடியாது. எலி தன் எதிர்காலத்தை பூனையிடம் ஒப்படைப்பதும், ஆடு தன் எதிர்காலத்தை ஓநாயிடம் ஒப்படைப்பதும், புள்ளிமான் தனது எதிர்காலத்தை புலியிடம் ஒப்படைப்பதும் பாம்பு தன் எதிர்காலத்தை கீரியிடம் ஒப்படைப்பதும், எப்படி ஆபத்தானதோ அதே போன்றுதான் சிங்களக் கட்சிகளிடம் தமிழினம் தன் பொறுப்புக்களை ஒப்படைப்பதும் ஆபத்தானது!

தனக்கென்று ஒருமொழி, தனக்கென்று ஒரு தாயகம், தனக்கென்று ஒரு பாரம்பரியம், தனக்கென்று ஒரு வரலாறு படைத்த ஈழத் தமிழினம், தனக்கென்று ஓர் அரசியலமைப்பை வைத்து தனது உரிமைகளைப் பாதுகாக்கப் போராடுவது சனநாயக மரபுகளுக்குகூட ஒன்றும் முரண்பட்டதல்ல!

நண்பா, அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு காவடி தூக்கிச்சென்ற சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான கே. பி. இரத்நாயகாவும், டி. பி. சுபசிங்காவும், தமிழர்கள் சுதந்திரக் கட்சியை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்: தமிழினத்துக்கு எதிராகப் பச்சை வகுப்புவாதத்தை தென்னிலங்கையில் தூண்டுவதில் முன்னணி வகித்தவர்கள்—வகித்துவருபவர்கள்— தமிழர் தலைநகரில் சென்று இவ்வளவு தூரம் துணிச்சலாக பேசிவிட்டு திரும்பிவந்ததற்கு என்ன இருந்தாலும் ஒரு சபாஷ் போடத்தான் வேண்டும்!

(8-ம் பக்கம் பார்க்க)


உலக சிறுவரில் அரைப் பகுதியினர் ஈறுவியாதிகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது உலக சுகாதார நிபுணர்கள் கூற்று.

அநேகம் பற்கள் ஈறுவியாதிகளினாலேயே சேதமடைகின்றன என்பது இன்றைய கண்டுபிடிப்பு. ஈறுவியாதிகள் எங்கும் பரந்து ஈறுகளை நிரந்தரமாகவே சேதமாக்குகின்றன. இதனால் உலக சிறுவரில் அரைப்பகுதியினரும் வளர்ந்தோரில் பெரும் பகுதியினரும் பாதிக்கப்படுகின்றனர்.

ஈறுவியாதிகளை தடைப்பண்ண நிச்சயமான வழி ஈறுகளை உடனடியாக கவனிப்பதே— அதாவது போர்ஹான்ஸ் பற்பசை கொண்டு ஈறுகளை பராமரிப்பதே. போர்ஹான்ஸ் இளம் பற்கள் உரமாக வளரவும், உரம் பற்கள் இளமையுடன் நிலைக்கவும் உதவுகிறது — பற்கள் சுத்தமாகவும் வெண்ணிறமாகவும் விளங்கச் செய்கிறது.

எவ்வளவுக்கு உடனடியாக உங்கள் சிறுவரின் ஈறுகளை கவனிக்கிறீர்களோ அவ்வளவுக்கு அவர்கள் பற்கள் நீடித்திருக்கும். இன்றே அவர்களுக்கு போர்ஹான்ஸ் பற்பசை உபயோகிக்க பழக்குங்கள். போர்ஹான்ஸ் ஈறுகளை பாதுகாக்கும் விசேட மருந்துகள் கொண்டது.




வரையறுக்கப்பட்ட மஹாராஜா நிறுவகம்

1117


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது இன்றைய தமிழ் தின

# அன்றே பாடிவைத்தார் பார

தினசரிப் பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளை நூற்றுக்கு நூறு வீதம் உண்மையென நம்பி மக்கள் படித்த காலமொன்றுண்டு. அதற்கு ஏற்றாற் போல தினசரி ஏடுகளும், நடுவுநிலை கோளுது "சமன்செய்து சீர் தூக்கும் கோல் போல் அமைந்தொரு பாற் கோடாது" செய்திகளைப் பிரசுரித்தும் வந்தன.

மக்களின் உண்மையான அபிலாஷைகளை — உள்ளத் துடிப்புக்களை பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்க வேண்டியது தினசரி ஏடுகளின் நீங்காக் கடமையாகும். ஒரு தினசரிப் பத்திரிகை ஒரு குறிப்பிட்ட கொள்கையைத் தழுவியோ, எதிர்த்தோ தனது கருத்துக்களை ஆசிரியத் தலையங்கம் மூலம் தெரிவிக்கலாம். ஆனால் தேசிய தினசரி என்று மகுடமிட்டுக் கொண்டுவரும் பத்திரிகைகள், தமது கருத்துக்கு விரோதமான கருத்துடையவர்களின் செய்திகள் என்றாலும் கூட, அவற்றை உள்ளது உள்ளபடியே ஒளிக்காமல் மறைக்காமல் — கூட்டாமல் குறைக்காமல் கொடுக்கப்படவேண்டிய முக்கியத்துவத்தைக் கொடுத்து வெளியிடவேண்டியது அவசியமாகும். ஒரு செய்திப் பத்திரிகை கடைப்பிடிக்க வேண்டிய 'பத்திரிகா தர்மமும்' இதுதான்.

ஆனால் இன்று, இந்நாட்டில் வெளிவரும் நாளிதழ்களில் எத்தனை பத்திரிகைகள் 'பத்திரிகா தர்மத்தை' கடைப்பிடிக்கின்றன? நடுவு நிலை தவறாமல் தனக்கு விரோதமானவர்களின் செய்திகளுக்கும் உரிய முக்கியத்துவம் அளிக்கின்றன? மக்களின் உணர்ச்சிகளுக்கும் அபிலாஷைகளுக்கும் மதிப்பளிக்கின்றன? என்பன போன்ற கேள்விகளை எழுப்புவோமானால், பதில் வேதனையும் வெட்கமும் நிறைந்ததாகவே, இருக்கும்.

ளுக்கு அளவுக்கதிகமான முக்கியத்துவம் கொடுத்தும், பொய்யும் பித்தலாட்டமும் கலந்த செய்திகளை அலுவலகங்களிலேயே தயாரித்து வெளியிட்டு வரும் தமிழ்த் தினசரிகளின் துரோகத்தனம் தமிழினத்தவருக்கு இன்று தெட்டத் தெளிவாகப் புரிந்து விட்டது.

தமிழ் தினசரிகள் அரசியல் ரீதியில் மட்டும் தமிழினத்தை அழிக்க முயலவில்லை. கலாசார ரீதியில்—பண்பாட்டுத்துறையில்-தமிழ் இளைஞர்

டுமே ஈழத் தமிழினம் நச்சுக் கருத்துக்களிலிருந்து தப்பிப் பிழைக்க முடியும் என்பது எனது கருத்து.

தொண்டர்படை
ஒன்றமைத்து
தமிழ் எதிர்ப்போர்
தொடர்ந்தெழுதும்
ஏட்டை எல்லாம்
கண்டறிந்தபடி அவற்றை
மக்களெலாம் மறுக்கும்
வண்ணம்
கழறவேண்டும்
மண்டு தொகை திரட்டி
அதை

ந்துவிட்ட களிப்பில் நின்ற தமிழரசுத் தோழர்கள் 'தினபதி' செய்தி கண்டு கொதிப்படைந்து காணப்பட்டனர். குறிப்பாக நண்பர்கள் ச. முத்துலிங்கமும் தமிழன் பாசறை அருணசலமும் எரிமலைபோல குமுறியபடி நின்றனர்.

இதே வேளையில் தினபதியின் சகோதர ஏடான அன்றைய 'சன்' பத்திரிகையொன்றை கையில் தூக்கிக் கொண்டு "இதோ பாருங்கள் 'சன்' விளையாட்டை" என்று

'தினபதி'யின் தமிழ்த் துரோகத்தைப் பற்றியும், அப்பத்திரிகை வெளியிடும் பச்சைப் பொய்களைப் பற்றியும் மக்களில் ஒரு சாரார் தமக்குள் விவாதித்துக் கொண்டு இருந்தனர். அச்சூடான வாதப் பிரதிவாதங்களை நானும் ரசித்துக்கொண்டு நிற்கிறேன்.

அப்போது அங்கு நின்ற ஒருவர், தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் அவர்களின் நரம்புத்தள[ர்ச்]சி நோய்க்கு, இராசா[யன]க

## தமிழர் நலம் நாடா ஏடுகளை வழிக்கு கொ

களையும் யுவதிகளையும் கெடுத்து ஒழுக்கம் என்றால் என்ன விலையென்று கேட்கும் ஒரு எதிர்காலத் தமிழ் பரம்பரையை உருவாக்கும் கொடிய நாசச் செயல்களிலும் ஈடுபட்டு இருக்கின்றன.

பார்க்கவே கண் கூசும் ஆபாச அரை நிர்வாணப் படங்களையும் படிக்கவே வாய் நாறும் படுக்கையறைச் சம்பவங்களையும்—கற்பழிப்பு செய்திகளையும் கொலை வழக்குகளையும் தாங்கி வரும் இன்றைய சில ஈழத் தமிழ் தினசரிகளைப் படிக்கும் தமிழ் இளைஞர் சமுதாயம் கெட்டுக் குட்டிச் சுவராகாமல் ஒழுக்கம் நிறைந்த உன்னத சமுதாயமாகவா மாறப்போகிறது?

ஆறுமுகநாவலரும் விபுலானந்தரும், ஞானப்பிரகாசரும், தமோதரம்பிள்ளையும், வளர்த்த ஈழத்தமிழ், இன்று கற்பழிப்புச் செய்திகளும், காமச் சுவை கூட்டும் கட்டுரைகளும் எழுதவா பயன்படவேண்டும்? ஐயகோ ஈழத் தமிழினமே உன் நிலை இதுதானா?

தமிழையெழுதி, தமிழனிடம் விற்றுக்காசாக்கும் அதே

ஏடெழுத வல்லார் பால்
நல்கவேண்டும்!

ஃ ஃ ஃ

தமிழினத்தின் ஒற்றுமையைக் கெடுத்து அரசியல் ரீதியில் தமிழ் பேசும் மக்களை மட்டம் தட்டி விடுதலைப் பாதையிலிருந்து பிரித்து-ஒற்றையாட்சியின் கீழ் தமிழினத்தை பெரும்பான்மை இனத்துக்கு மீளா அடிமைகளாக வைத்துக் கொள்ளப் பாடுபட்டு வரும் ஒரு தினசரி தான் குணசேன நிறுவனத்

கூறியபடி என்னிடம் வந்தார் எனது நண்பரும் வழக்கறிஞருமான ஆலாலசுந்தரம்.

'சன்' பத்திரிகை அரசாங்கம் இலவசமாக வழங்கும் சிறிலங்கா (அரசாங்க) பஞ்சாங்கங்களை தமிழரசு எம். பீக்கள் துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்றும், தமிழரசு மாநாட்டிற்கான பெருவாரியான சுவரொட்டி விளம்பரங்கள் அப்பஞ்சாங்கத்தின் பின்புறத்தில் அச்சிடப்பட்டிருப்பதாகவும் முன்பக்கத்தில்

அமைச்சர் ஜே. ஆர். ஜெயவர்த்தன ஓர் அமெரிக்க மருந்தை சிபார்சுசெய்ததாகவும், அம்மருந்து பற்றி அமெரிக்காவில் என்ஜினியராக இருக்கும் மகனுடன் திரு. செல்வநாயகம் தொடர்பு கொண்டதாகவும் அம்மருந்தை உபயோகித்த பின்னர் தமிழரசுத்தந்தை சுகமடைந்து வருவதாகவும் 'தினபதி'யில் சில நாட்களுக்குமுன்வந்த செய்திகூடப் பொய்யாக இருக்குமோ என்று கேட்கிறார்!



## சோசலிசக்கொள்கைக்கு தமிழரசு விரோதியா?

இந்நாட்டு 'தேசிய தினசரிகள்' என்று மகுட மிட்டுள்ள ஏடுகள் நேர்மை தவறாது-நடுநிலை கோளுது — ஒருபக்கம் சாயாது செயற்பட்டிருந்தால், பத்திரிகைகளை தேசியமயமாக்க வேண்டும் என்ற 'கெட்ட எண்ணம்' மூந்திய அரசாங்கத்துக்கு முளைவிட்டிருக்காது என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

இதேவேளையில் இந்நாட்டுத் தமிழ்த் தினசரிகளின் நிலையை இங்கு எடுத்துரைக்கவே தேவையில்லை. தமிழை எழுதி, தமிழ் பேசும் மக்களிடம் தங்கள் ஏடுகளை விற்று பணப்பெட்டியை பெருக்கிக் கொள்ளும் அதே வேளையில் தமிழினத்தை அழித்து விடும் நச்சுக் கருத்துக்களை யெல்லாம் கசப்பு மருந்தை இனிப்புடன் கலந்து கொடுப்பது போல கொடுத்து வருகின்றன.

தமிழ்பேசும் மக்களிடையே சிண்டு முடியவும், தமிழினத்தை விடுதலைப் போராட்டப் பாதையிலிருந்து பிரித்துவிடவும், தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் இயக்கமான தமிழரசுக் கட்சிக்கு எதிரான பிரசாரங்க

நேரம் அரசியலில் அடிமைப்பட்ட தமிழினத்தையும், பண்பாட்டில் ஒழுக்கங் குறைந்த தமிழினத்தையும் எதிர்காலத்தில் உருவாக்கவும் சூழ்ச்சி நடைபெற்று வருகின்றது.

இலங்கையில் வெளிவரும் தமிழ்த் தினசரிகளைப்பற்றி எண்ணும் போது புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பின்வரும் பாடலொன்று ஞாபகத்துக்கு வருகிறது.

நடுநிலைமை இருப்பதில்லை
நல்லொழுக்கம் சிறிதுமில்லை
தமிழை மாய்க்கும்
கெடு நினைப்பே
மிகவுடையார்
கீழ்மையிலே உடல்
வளர்ப்பார்
பொருள் படைத்தோன்

அடிநத்த நாணுகிலார்
அற மொன்றும் கூறுகிலார்
ஏழையோரின்

மடி பறிக்கும் திறமுடையார்
மறந்தேனும் திரவிடரை
மதித்தல் இல்லார்.

இத்தகைய ஏடுகளை என்ன செய்ய வேண்டும் என்றும் புரட்சிக் கவிஞர் கூறுகிறார். அதன்படி நடந்தால் மட்

## செல்வாவுக்கு ஜே. ஆர். ஜெயவர்தன வைத்திய ஆலோசனைகூறினர்என்பது எவ்வளவு தூரம் உண்மை?

திலிருந்து வரும் 'தினபதி' என்னும் தமிழ் பத்திரிகையாகும். இந்த நோக்கத்துடன் தான் தமிழரசுக் கட்சிக்கு எதிரான பல பொய்ச் செய்திகளை அப் பத்திரிகை வெளியிட்டு வருகிறது.

'தினபதி'யின் இத்திய நோக்கத்தை தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பார்களானல் ஏப்ரல் 8ம் நாள் காலை தமிழரசு மாநாட்டரங்கில் கூடியிருந்த தமிழ் மக்கள் அன்றைய தினபதியில் வெளிவந்திருந்த அந்த விஷமத்தனமான செய்தியைக் கண்டு ஆயாசமோ ஆத்திரமோ அடைந்திருக்க மாட்டார்கள்.

மக்களின் ஆத்திரத்தையும் கோபாவேசத்தையும் கிளப்பிவிட்ட அந்தச் செய்தி என்ன தெரியுமா? தமிழரசுக் கட்சியின் முதல் நாள் மாநாட்டில்—அதாவது 7ம் திகதி மாநாட்டில் - 200 பேர் மட்டுமே கலந்து கொண்டதாக தினபதி தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்தது தான்!

முதல்நாள் மாநாட்டில் சுமார் 15,000க்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டதையும்—பல ஆயிரக்கணக்கான மக்கள் தெருவில் நின்றுகூட மாநாட்டு நிகழ்ச்சிகளைத் தரிசிக்கமுடியாது திரும்பிச் சென்றதையும் நிதர்சனமாகக் கண்டவர்களுக்கு பொட்டிட்டு கூறியதுபோல 200 பேர் கலந்து கொண்டதாக தினபதி பச்சைப் பொய்யை வெளியிட்டது கண்டு கோபாவேசம் முட்டி மோதிக்கொண்டு வந்ததில் வியப்பில்லை.

மாநாட்டின் வெற்றிக்காக அரும்பணியாற்றி — முதல் நாள் மாநாடு வெற்றியடை

ஒரு செய்தியை பரபரப்பாக வெடியிட்டிருந்தது.

'பார்த்தீர்களா 'சன்' ஏட்டின் விஷமத்தனத்தை? தமிழரசு எம். பீக்கள் மேல் வீண் அபவாதத்தையும் கெட்ட பெயரையும் ஏற்படுத்துவதற்காக 'சன்' செய்துள்ள சூழ்ச்சியை! அரசாங்கம் வெளியிட்டுள்ள இலவச பஞ்சாங்கத்தின் பின்புறத்தில மாநாட்டுச் சுவரொட்டிகளின் இரண்டொரு 'புறூவ்' கொப்பிகள் எடுத்திருக்கலாம். அதற்காக சுவரொட்டிகள் முழுவதுமே அரசாங்கப் பஞ்சாங்கத்தில் அச்சடிக்கப்பட்டன என்று கூறுவது முறையானதா? சுத்த அபத்தமலலவா? என்று ஆத்திரத்துடன் பொரிந்து தள்ளினர் நண்பர் ஆலால சுந்தரம்.

மாநாட்டின் சிறப்புக்காக ஊணுறக்கமின்றி தனது சட்டத் தொழிலையும், தற்காலிகமாகக் கைவிட்டு, ஓடியாடி உழைத்த நண்பர் ஆலாலுவுக்கு ஆத்திரம் வரத்தானே செய்யும?

"சன் ஏடு அப்படியொரு செய்தியை வெளியிட்டதாலும் நமக்கு நட்டம் எதுவுமில்லை. அரசாங்க சாதனங்களை தமிழினத்தின் விடுதலை இயக்கமாம் தமிழரசுக் கட்சி எப்படி எப்படி பயன்படுத்துகிறது என்பதை நமது மக்கள் உணர்வதற்கு இது ஒரு வாய்ப்புத்தானே" என்று நகைச்சுவையுடன் கூறி அவரைச் சமாதானப்படுத்தி வைத்துவிட்டு அப்பால் நகர்கிறேன்.

அவர்களது உரையாடலில் அப்போதுதான் நான் குறுக்கிடுகிறேன். "தமிழரசுத் தந்தை மருந்து உட்கொள்வதும் அதனால் அவர் இப்போது சிறிது நலமடைந்திருப்பதும் உண்மைதான்: ஆனால் இதுபற்றி தினபதியில் வெளிவந்த ஏனைய விபரங்கள் அனைத்தும் தவறானவை" என்கிறேன் உறுதியாக.

அப்படியானல் உண்மையென்ன? என்கின்றனர் அனைவரும் ஒரே குரலில்!

'1961ம் ஆண்டு [த]டுப்புக் காவலில் வைககப்பட்டிருந்த நேரததில் தமிழரசுத் தந்தைக்கு கடுமையான சுகவீனம் ஏற்பட்டதும் அதனால் அவர் சிகிச்சைக்காக இங்கிலாந்து சென்றதும் உங்களுக்கு நினைவிருக்கலாம். இங்கிலாந்தில் எடின்பரோவிலுள்ள வைத்திய நிலையமொன்றில், தமிழரசுத்தந்தைக்கு சிகிச்சை அளித்த பிரபல டாக்டர் ஒருவர், தமிழரசுத் தந்தையின் நரம்புத் தளர்ச்சி நோய்க்கு வைத்திய உலகில் இன்னும் மருந்து கண்டு பிடிக்கப்படவில்லையென்றும் மருந்து [கண்]டு பிடிப்பதற்கான மு[யற்]சி வெற்றியடையும் நிலையிலிருப்பதாகவும், கண்டு பிடிக்கப்பட்டதும், தகவல் தருவதாகவும், அப்போது கூறியிருந்தார்.

அதே இங்கிலாந்து டாக்டர், சில மாதங்களுக்கு முன்னர் இலங்கை வந்திருந்த போது தமிழரசுத் தந்தையின் இல்லத்துக்கும் சென்று

கோவை மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# னசாரிகளைப் பற்றி

# ரதிதாசன்!

சுகம் விசாரித்ததுடன், தந்தையின் நோய்க்கு ஏற்ற மருந்து கண்டு பிடிக்கப்பட்டு விட்டதாகவும், அம்மருந்தை உபயோகித்துப் பார்க்கலாமென்றும் கூறி மருந்தின் பெயரையும் எழுதிக் கொடுத்திருந்தார். கொழும்பிலுள்ள ஒரு பிரபல டாக்டரின் உதவியுடன் இங்கிலாந்திலிருந்து அம்மருந்து தருவிக்கப்பட்டது. இதன் பின்புதான் ஒரு நாள் குறித்த மருந்து பற்றி தமிழரசுத் தந்தைக்கு திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆலோசனை கூறி

நாயகம் ஆகியோர் தலைமை தாங்கி வருகின்றனர்.

பின்னால் நமது வீரத்தமிழ் மங்கையர் கூட்டம் அணிவகுத்து வருகிறது. இந்த அணிவகுப்புக்கு தலைமை தாங்கி வருகிறார், ஈழத் தமிழ்ப் பெண்களுக்கு அரசியல்விழிப்புணர்வூட்டி வரும், இந் நாட்டுக் கவிக்குயில் சரோஜினி நாயுடுவான திருவாட்டி மங்கையக்கரசி அமிர்தலிங்கம் அவர்கள். அவர்களது வதனங்களில் உறுதிப்பாடும், விடுதலை உணர்வும்

பட்டு நின்றது. இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? ஈழத்தமிழகத்தின் ஒற்றுமை தானே இலங்கைத்தமிழரசுக்கட்சி!

உடுவில் பா. உ. திரு. தர்மலிங்கம் வரவேற்புரை நிகழ்த்துகிறார். அவர் வரவேற்புரை நிகழ்த்துவதில் மட்டுமன்றி, உண்மையிலே மாநாட்டுக்குச் சென்ற பிரதிநிதிகளை வரவேற்று, உபசரித்து அவர்களுக்கு வேண்டிய உணவு, உறைவிட வசதிகளைச்செய்து கொடுத்து தாம்வாய்ஓர் வீரரல்ல, செயல் வீரர் என்பதை நிரூபித்து விட்டாரென்பதை இங்கு குறிப்பிடத்தான் வேண்டும். எளிமையான போக்கும், இனிமையான சுபாவமும் குழந்தைத்தனமும் நிரம்பப்

# கொண்டுவர வழியென்ன?



தொழிலாளர் மாநாட்டில் திரு. துரைரத்தினம் பேசுகிறார்.

யிருந்தார். ஆனல் ஜே. ஆர் தான் முதன் முதலாக செல்வாவுக்கு குறித்த மருந்தைச் சிபார்சு பண்ணியதாக தினபதி எழுதியிருந்தது முற்றிலும் தவறனது.

அது மட்டுமன்றி, தினபதி எழுதியது போல தமிழரசுத் தந்தையின் மூத்தமகன் என்ஜினியருமல்ல; குறித்த 'மருந்து அமெரிக்காவிலிருந்து வரவழைக்கப்பட்டது மல்ல! இங்கிலாந்திலிருந்தே மருந்து தரப்பட்டது! எவ்வித ஆராய்ச்சியுமின்றி எழுந்தமானத்தில் தினபதி 'செய்தி' வெளியிடுகின்றதென்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்!'

—இப்படியொரு குட்டிப் பிரசங்கத்தை நான் அடித்து முடிக்கவும் மாநாட்டரங்குக்கு அருகிலுள்ள உடுவில் கிராமசபை அலுவலகத்திலிருந்துநாதஸ்வர ஓசைகேட்கவும் சரியாக இருந்தது. இப்போது காலை 10 மணி. இதோ, தொண்டர் படை அணிவகுப்பு ஆரம்பமாகப் போகிறது. தமிழரசுச் சின்னம் பொறிக்கப்பட்ட காந்திக்குல்லாய்களைத் தலைக்கு அணிந்து, கையில் தமிழரசுக் கொடிகள் பட்டொளி வீசிப் பறக்க நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையுடன் தமிழரசுப் படை புறப்படுகிறது. அணிவகுப்பின் முன்னணியில் தலைவர் இராசமாணிக்கம், பொதுச் செயலாளர் அமிர்தலிங்கம் ஈழத்துப் பட்டேல் நாகநாதன், புரக்டர் நடராசா' செந்தமிழ்ச் செல்வர் இராசதுரை, அறப்போர் அரிய

பொங்கி வழிகின்றன. தமிழர் நலனுக்காக கைப்பிடித்த கணவனுடன் சேர்ந்து ஓய்வுஒழிச்சலின்றி உழைத்து வருபவரல்லவா திருமதி மங்கையர்க்கரசி அவர்கள்! மாநாடு நடைபெற்ற மூன்று தினங்களிலும், அவர்கள் ஆற்றிய தொண்டு... ...அப்பப்பா, வார்த்தையில் அடங்காது!

இப்படி வீரவாலிபர்களும் வனிதையர்களும் ஊர்வலமாக அணிவகுத்து வந்த காட்சி, இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களையே எமது நினைவுக்கு கொண்டு வருகிறது.

இதோ, கொடிக்கம்பத்தின் முன்னால் தமிழரசுத் தலைவர்களும் தொண்டர்களும் அணிவகுத்து நிற்கின்றனர். வாழ்க ஈழத் தமிழகம், வாழ்க இனிது வாழ்கவே என்ற ஈழத் தமிழினத்தின் தேசிய கீதத்தை இரு சிறுமிகள் இசைக்கிறார்கள். தொடர்ந்து அதை அப்படியே அச்சொட்டுப் பிசகாமல் நாதஸ்வரத்திலே வாசிக்கிறார் இணுவில் நாதஸ்வர வித்துவானன திரு. கோவிந்தசாமி,

பெற்ற திரு. தர்மலிங்கம் தமிழரசுக் கட்சிக்கு கிடைத்த ஓா தங்கச் சுரங்கம் என்பதை சொல்லவும் வேண்டுமா?

இதோ தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரான திரு. இராசமாணிக்கம் தமது தலைமையுரையைப் படிக்கிறார். தெளிவாக அறுத்து உறுத்து— உறுதி கலந்த தொனியில் தலைமையுரையை நிகழ்த்தினர் இராசமாணிக்கம். அவர் தமது தலைமையுரையை சரியாக 40 நிமிடத்தில்படித்துமுடித்தார். அரசியல் மாநாடு அத்துடன் நிறைவு பெறுகிறது.

அடுத்தது, தொழிலாளர் மாநாடு. இம்மாநாடு நடைபெறும் அரங்குக்கு ஐயாவு-பிரான்சிஸ் அரங்கு என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். ஐயாவு—பிரான்சிஸ் என்ற பெயரைக் கேட்டதும் என் சிந்தனை திடீரென 1957ம் ஆண்டுக்குபின்னேக்கிப்பாய்கிறது.

1957ம் ஆண்டு, வடக்கிலும் கிழக்கிலும் தமிழுரி

## எழுச்சியை ஏற்படுத்திய மூன்று நாட்கள்—3.

கோவிந்தசாமியின் நாதஸ்வர இசை நின்றதும், தமிழரசு வாழ்க, ஈழத் தமிழினம் வாழ்க, தமிழரசுத் தந்தை செல்வா வாழ்க என்று பல வாறன வாழ்த்தொலிகளுக்கிடையே— கொட்டு மேளம் முழங்க மூவர்ணக் கொடியை ஏற்றி வைக்கிறார் டாக்டர் நாகநாதன். மகிழ்ச்சியாரவாரம் செய்யும் மக்களின் கரவொலி எட்டுத்திக்கும் எதிரொலிக்கிறது.

இப்போது நேரம் காலை 10-30. அரசியல் மாநாடு ஆரம்பமாகப் போகிறது. ஈழத்தமிழினத்தின் நல்வாழ்வுக்காக உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணித்த கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கம் அவர்களின் பெயர் அரங்குக்கு சூட்டப்பட்டிருந்தது. காலை நேரம் என்றாலும், பந்தல் சனக்கூட்டத்தால் நிரம்பி வழிகிறது. மட்டுநகர், மன்னர், வவுனியா, திருகோணமலை, மலைநாடு, கொழும்பு போன்ற பல்வேறிடங்களிலும் இருந்து திரண்டுவந்திருந்த மக்[illegible] காண்கிறேன்—ஆம், [illegible] ஈழத்தமிழகம் முழுவதுமே திரண்டு ஒன்றாக ஐக்கியப்

மைப் போராட்டம் வெகு வேகத்துடன் நடந்தகாலம். சிறீயை எதிர்த்து பல்லாயிரக்கணக்கான தமிழ் வாலிபர்கள் சிறையை நிறைத்த காலம். வடக்கிலும் -கிழக்கிலும் தமிழரசுக்கட்சியின் தலைமையில் பொங்கியெழுந்த தமிழுரிமைக் கிளர்ச்சி மலையகத்து தமிழ் இளைஞர்களின் உள்ளங்களிலும் இனவுணர்வையும் விடுதலை ஆவேசத்தையும் கொழுந்துவிட்டெரியச் செய்தது. ஆனல் அந்த உணர்வை வளரவிடாமல் நசுக்கி, தொழிலாளர்களின் ஏமாளித்தனத்தின்மேல் உப்பரிகை அமைத்து வாழ்ந்து வந்தனர் மலையகத்தொழிற் சங்கத்தலைவர்கள்.

மலையகத் தமிழ் இளைஞர்களின் விடுதலை உணர்வை எவ்வளவுதான் அடக்கி வைக்க 'ஜெனீவா' தலைவர்கள் முயன்றாலும், அது ஒரு நாள் பீறிட்டெழுத்தான் செய்தது. ஆம், 1957ம் ஆண்டு பொகவந்தலாவையைச் சேர்ந்த பல ஆயிரக்க[illegible] உயர்த்தினர்கள். வடக்கிலும் கிழக்கிலும், மலையகத்திலும் ஒலிப்

# அண்ணா காவியம்

காசி ஆனந்தன்

## அண்ணா மழலை

வீரத் தமிழ் அழகன் மண்மீது
விழுந்தெழுந்து கால்கள்
கீறித் தடமெழுதி மண்மாது
கிளுகிளுக்க ஆடும்
நேரத்தே ஒருநாள் அன்னை
இளவலின் வாய் நிறைதேன்
ஊறிப் பிறந்ததமிழ் இன்சொற்கள்
உரைத்திடுதல் கேட்டாள்!

கழனிப் புறத்தினிலே புள்ளின்வாய்
மொழிந்ததைத் போலும்
பழவாய்க் கிளிமொழிந்த பேச்சுக்கள்
எனவு மசைந்தோடும்
அழகு மலையருவி இசைபோலும்
அருந்தமிழர் பிள்ளை
மழலை இசை பொழிந்தான்—பேரின்பம்
மகிழ்ந்ததுகாண் நாடே!

தன்னை இதுவரைக்கும் தேன்சொட்ட
அமுதுதாவ வாயால்
இன்னல்கை யழகாய்ச் சொன்னவர்
எவருளரென் றங்கே
அன்னையெனும் தமிழ்த்தாய் புன்னகை
அவிழ்த்திடவும் தமிழர்
மண்ணினுடல் சிலிர்க்கவும் மயங்கு
தமிழ்மொழிந்தான் மைந்தன்!

குழலினிசை இனிதுகாண் எனவும்
அருங் கோட்டு யாழின்
ஒழுகிசை இன்தெனவு முரைப்பர்
இளங்குழவி சிந்தும்
மழலை செவிநுகரார் எனுங்குறளின்
இனிமையிலும் மிகவாய்
அழகனிவன் மழலை இனித்ததே
உளங்களெலாம் அம்மா!

தாயாள் ஒருதடவை சொல்லுவாள்
அதுபோதும் தனையன்
தேயா நினைவுடையான் அத்தீஞ்சொல்
தனை மறவான் நாளும்
வாயால் அம்மொழியைப் பிறசொற்கள்
உடனிணைத்து மகிழ்வான்!
தாயான் எழிற்றமிழில் ஆயிரம்
சுவைபெறுவாள் தொத்தா!

கரும்பு பிழிந்தெடுத்த தீஞ்சாறும்
நறுந்தேனும் கரும்பும்
அருங்கனி மா பலா வாழையென்னும்
அவையும் ஏலக்காயும்
குரும்பை தருமிளநீரும் ஆவின்
குளிர்பாலும் பனையின்
அரும்பு தருகள்ளின் பாகுமொன்று
கலந்த மொழி அமுதம்!

என்னே மழலை! இதுபோல் வேறோர்
எழிலுளதோ? காஞ்சி
இந்நாள் வரையிது போலோர் இன்பச்
சுவையினை ஏற்றதுண்டோ?
முன்னே இருந்தபழம் புலவோர்தம்
மொழியுமோர் மொழியோ?
தென்னாடனைத்துமிவன் மழலைத்தேன்
நதி திரண்டோடியதே!

பழுத்த குலைவாழை அதனிடையோர்
அணில் இசைத்த பண்ணும்
கொழுத்த குலைமாவின் இடையிருந்தோர்
குயில் தெளித்த கவியும்
செழித்த குவளையிடை இருந்தேவாய்
சிரித்த தேனீ பாட்டும்
பழித்த மொழியுடையான் வாய்மழலை
படச்சிலிர்த்தது வையம்

முத்து மணிவிழிகள் தொட்டதே
எனவும் இனித்திருக்கும்
புத்தமுது சுவைநா தொட்டதே
எனவும் எழில் முல்லைக்
கொத்து மணமூக்கைத்தொட்டதே
எனவும் இவன் குறுவாய்த்
தத்துமொழி செவிகள் தொட்டதே
பொழிந்ததே தமிழின்பம்!

முது முனிதமிழென்பது செய்த
அதுபொழுது முதலாய்
பொதிகையு மிவனெழிற்றமிழ் போவோர்
தமிழ் புகன்ற திலையால்
மதுவெனும் அழகுசெந்தமிழ் தோன்றி
வளர்ந்த மாமலையம்
பொதிகையின் அழகையும் வென்றதோர்
புகழுடைத்தே காஞ்சி!

பது. ஈழத்தமிழர்களின் ஏகோபித்த உரிமைக்குரலே என்பதை சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு தெளிவுபடுத்தினார்கள். அப்போராட்டத்தில் திருமலைத்தியாகி நடராசன்பாதையிலே பொலிஸாரின் துப்பாக்கிக் குண்டுக்கு தம் இன்னுயிரை பலிகொடுத்து தமிழர் விடுதலைப் போராட்ட காவியத்தை இரத்தத்தால் எழுதிய மலையகத்தின் இருமாணிக்கங்கள் தாம் ஐயாவு பிரான்சிஸ். இந்நாட்டுப் பொருளாதாரத்துக்காக தமது உடலைப் பிழிந்து கொடுத்தது

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

# மே திருநாளும் பாவ மன்னிப்பும்

நண்பா, அநுராதபுரம் பா. உ. கே. பி. இரத்நாயகாவைப் பற்றிய ஒரு செய்தி தெரியுமா? அரசாங்க ஊழியராக இருந்த இவர், சிங்களம் மட்டும் வந்தபின்னர், சிங்களத்தில் தம்மால் வேலை செய்ய இயலாது எனக் கூறி அரசாங்க ஊழியத்திலிருந்து இளைப்பாறியவர்.

இப்படிப்பட்ட மகானுபாவரைக்கொண்ட சிறீலங்கா சுதந்திரக் கட்சிதான் தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்களைக்கொண்டு சிங்களத்தில் வேலைவாங்க வேண்டுமென துடியாய்த் துடிக்கிறது. ஒரு சிங்களவர், சிங்களத்தில் வேலைசெய்ய இயலவில்லையென்று அரசாங்க ஊழியத்திலிருந்து வெளியேறும்போது தமிழ் ஊழியர்களிடம் சிங்களத்தில் வேலைவாங்க நினைப்பது எவ்வளவு அநியாயம், அக்கிரமம், என்பதை சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மற்றவர்கள் எண்ணிப் பார்க்காவிடினும் கே. பி. இரத்நாயகா போன்றவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

தோழா, தமிழரசுக் கட்சி எதைச் சாதித்துவிட்டது என்று சிலர் கேட்கும் கேள்விக்கு சுதந்திரக் கட்சியினர் யாழ்ப்பாணத்துக்கு காவடி தூக்கிய சம்பவமே பதிலடியாக அமைந்திருக்கிறது.

சிறுபான்மை மக்களின் ஆதரவு எமக்குத் தேவையில்லை—பௌத்த சிங்களவர்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்து தமிழினத்தை அடக்கி ஆண்டு அழித்துவிடுவோம் என நேற்றுவரை இறுமாந்திருந்த சுதந்திரக் கட்சி—இன்று தமிழ்பேசும் மக்களை மதித்து அவர்களிடம் சென்று மண்டியிட்டு பாவமன்னிப்பு கோருகிறதென்றால் அது யாரால் விளைந்த வெற்றி என்று நினைக்கிறாய்? தமிழ் பேசும் மக்கள் கடந்த 13 ஆண்டுகளாக தமிழரசுக் கட்சியின்கீழ் கட்டுப்பாடாக இயங்கிவருவதால் விளைந்த பயன் அல்லவா?

நண்பா, சுதந்திரக்கட்சி சிறுபான்மை மக்களின் பிரச்சினையில் உண்மையில் மனமாற்றம் அடையவில்லை, தேர்தலுக்காக போடும் வேஷம் அதுஎன்றுசிலர் வாதாடலாம்! அக்கூற்றில் உண்மையில்லாமலுமில்லை!

ஆனால் சிறுபான்மை மக்களைத் தூசென மதித்தவர்கள் இன்று அவர்களின் சக்தியை—பலத்தை எப்படியோ உணர்ந்து விட்டார்கள். சிதறிக் கிடந்த சிறுபான்மை மக்களின் சக்தியைத் திரட்டி சிங்களக்கட்சிகளை அவர்களிடம் மண்டியிட வைத்த சாதனையைப் புரிந்தது தமிழரசுக் கட்சியல்லவா?

தோழா, யாழ்ப்பாணத்தில் — தமிழர் தலைநகரில்— நாகவிகாரையில் நின்று அழுது புலம்பியிருக்கிறார்கள் — பாவமன்னிப்புக் கேட்டிருக்கிறார்கள், சுதந்திரக்கட்சி பா. உ.க்கள் அக்கூட்டத்துக்குதலைமை தாங்கியதுகூட ஒரு பௌத்த பிக்கு என்பதிலிருந்தே அவர்களது அரசியல் குடுமியின் 'பிடி' இன்னும் எங்கேயிருக்கிறது என்பதை புரிந்துகொள்!

நண்பா, 1966ம் ஆண்டு ஜனவரி 8ம் நாள் தமிழுக்கு சில அடிப்படை உரிமைகளையளிப்பதற்காக கொண்டு வரப்பட்ட தமிழ்மொழிச் சட்டவிதிகளுக்கு எதிராக பாராளுமன்றத்திலும்வெளியிலும் கூட்டுக்கட்சிகளால் கிளப்பப்பட்ட மிருகத்தனமான இனவெறியும் மசாலவடை கோஷமும் தமிழ்த்வேஷமும் இன்னும் உன் மனதைவிட்டு நீங்கியிராது!

மாவட்டசபை மசோதாவுக்கு எதிராக நாடு முழுவதும் விஷவித்துக்களைப் பரப்பி, மாவட்ட சபை ஏற்பட்டால் நாடு பிரிந்துவிடும் என்றும், வடக்கும் கிழக்கும் தமிழர் ஆதிக்கத்துக்குள் போய்விடுமென்றும் சிங்கள மக்களைத் தூண்டிவிட்டு தமிழ் மக்கள் ஆவலோடு எதிர் பார்த்திருந்த மாவட்ட சபைகள் ஏற்படாமல் மண்ணை அள்ளிப்போட்டவர்கள் சுதந்திரக்கட்சியினரும் கம்யூனிஸ்ட், சமசமாஜிகளும் தாம்!

இன்று கூட என்ன நடக்கிறது?

தமிழ் மொழிச்சுற்றறிக்கையை வாபஸ் வாங்கு!

தமிழ்ப் படங்களைத்தடை செய்!

தமிழ் பிரதேசங்களில் சிங்களவரை ஆயிரக்கணக்கில் குடியேற்று!

சிங்களத்தில் தேர்ச்சியடையாத தமிழ் அரசாங்க ஊழியர்களை வெளியேற்று!

தமிழ் புத்தக இறக்குமதியை தடை செய்!

(எங்குமே இல்லாத) நாம் தமிழர் இயக்கத்தை தடை செய!

என்பன போன்ற தமிழ் எதிர்ப்பு கோஷங்களை தென்னிலங்கையில் தூண்டிவிட்டு வருபவர்கள் யாரென்கிறாய்? பெரும்பாலும் சுதந்திரக் கட்சியினரும் அவர்களது சகபாடிகளும் தான்!

'நாம் தமிழர்'' இயக்கத்தை தடை செய் என்று இவர்கள் கூப்பாடு போடுகிறார்களே! அப்படியொரு இயக்கம் இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலேயே இல்லையே என்று சிலர் அங்கலாய்க்கிறார்கள். உண்மையில் இக்கோஷத்தின் அடிப்படை அர்த்தம் என்ன தெரியுமா?

இந்நாட்டுத் தமிழர்கள் தங்களை 'நாம் தமிழர்கள்' என்று கூறுவதை தடை செய்யவேண்டும்— அதாவது தமிழன் தன்னை தமிழன் என்று கூறிக்கொள்வதை தடை செய்ய வேண்டுமென்பதுதான்!

வட இலங்கையில் கே. பி. இரத்நாயகாவும் சுபசிங்காவும் தமிழர்களுக்காக "கண்ணீர்' வடித்திருக்கும்போது தென்னிலங்கையில் அவர்களது தலைவியார் சிறிமா அம்மையார் என்ன கூறியிருக்கிறார் தெரியுமா?

ஐயையோ, சிங்களம் மட்டும் அரசாங்கமொழியென்ற நிலைமாறி தமிழுக்கு சம அந்தஸ்து அளிக்கப் பட்டு விட்டதே! சிங்களத்தின் நிலை தாழ்ந்து விட்டது. தமிழின் நிலை உயர்ந்து விட்டது. சிங்களம் 7 மாகாணங்களில் மட்டும் அரசாங்க மொழியாக இருக்க தமிழ் 9 மாகாணங்களிலும் செயல்பட்டு அரசகரும மொழியின் இடத்தைப் பிடித்து விட்டது. வடக்கு, கிழக்கில் இன்று சிங்களம் இடம் செயலிழந்து விட்டது. தனிச் சிங்களச் சட்டத்தை திணிப்பதற்கு நான் தமிழ்ப்பகுதிக்கு அனுப்பிய சிங்கள ஊழியர்களை தமிழரசுக்கட்சி அரசாங்கத்தை நெருக்கி வாபஸ் பெறச் செய்து விட்டதே! என்று எல்லாம் றக்குவானையில் நடைபெற்ற கூட்டமொன்றில் ஒப்பாரி வைத்திருக்கிறார் அம்மையார்.

இது மட்டுமா நண்பா, நூரளை மாவட்டத்தில் இடதுசாரி சார்புள்ள கிராமசபைத் தலைவர்களின் கூட்டமொன்று நூரளை பட்டினசபை மண்டபத்தில் கடந்த வாரம் நடைபெற்றிருக்கிறது. அக்கூட்டத்தில் சு. கட்சி எம். பியான டி. பி. இலங்கரத்தின என்ன கூறியிருக்கிறார் தெரியுமா?

''அரசாங்கத்தின் மொழிக் கொள்கையால் சிங்களத்தின் நிலை தாழ்ந்து விட்டது. சிங்களத்தை மட்டுமே ஆட்சி மொழியாக்குவதன் மூலம்தான் தேசிய ஐக்கியத்தை காணமுடியும்''

('சன்' ஏப்ரல் 25)

இப்படிக் கூறியிருக்கிறார் டி. பி. இலங்கரத்தின. இது மட்டுமா?

சுதந்திரக் கட்சி தனது கட்சியிலுள்ள தமிழ் உறுப்பினருடன்கூட தனிச்சிங்களத்தில் கடிதத்தொடர்பு வைக்கிறது. இப்படிப்பட்ட கட்சி ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களுடன தமிழில் கடிதத் தொடர்பு வைத்துக் கொள்ளும் என்பது என்ன நிச்சயம்! மானமுள்ள தமிழன் சுதந்திரக் கட்சியில் உறுப்பினராக இருக்கவே முடியாது''

என்று நீண்ட அறிக்கை விட்டு விட்டு அதிலிருந்து விலகிக் கொண்டதாக அறிவித்துள்ளார் மட்டுநகரைச் சேர்ந்த ராஜா இம்மனுவல் என்பவர்.

நண்பா, ஒரே நேரத்தில் கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசைப்படக்கூடாது. தேசிய ஐக்கியம் ஏற்பட வேண்டும் என்று சுதந்திரக் கட்சியும் சரி, யூ. என். பியும் சரி உண்ணா விரும்பினால் தனிச்சிங்கள வகுப்புவாதக் கொள்கையைப் பூரணமாக கைவிட்டுத் தமிழையும் இந் நாட்டு ஆட்சிமொழியாக்க ஒப்புக்கொள்ள வேண்டும். அல்லது சிங்களம் மட்டும் கொள்கையை வைத்துக்கொண்டு தேசிய ஒற்றுமைக்கேடு கெட்டாவது போகட்டும் என்று விட்டுவிட வேண்டும். இரண்டில் ஒரு முடிவுக்கு சிங்களக்கட்சிகள் வந்துவிட வேண்டியது அவசியம்!

தோழா, மரம் பழுத்தால் வௌவால்கள் வரத்தான் செய்யும். அதுபோல் தேர்தல் நெருங்கி வரும்போது அரசியற் கட்சிகள் 'அதுவும் இதுவும்' சொல்லி ஏமாற்றத்தான் முயலும்! ஆனால் தமிழ் பேசும் மக்களை யாரும் ஏமாற்ற முடியாதென்பதை கடந்த நான்கு பொதுத்தேர்தல்களில் அளித்த தீர்ப்புக்கள் மூலம் நிரூபித்து விட்டனர். அறிவாய்!

எனவே, நண்பா, கூட்டுக் கட்சிகளுக்கு சிறுபான்மை மக்களின் மேல் உண்மையான பற்று பாசம் ஏற்பட்டிருக்குமானால் வடக்கே யொன்றும் தெற்கே யொன்றும் கூறுவதை முதலில் நிறுத்த வேண்டும். அடுத்து சிறுபான்மை மக்களின் பிரச்சினை தீர தங்கள் திட்டம் என்னவென்பதை வரையறையாக —திட்டவட்டமாக தெரிவிக்க வேண்டும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலம்!

வெறுமனே சோசலிசமே சிறுபான்மைப் பிரச்சினை தீர ஒரே வழியென வாய்வலிக்க கூவுவதால் தமிழர் ஏமாந்துவிடார். பெரும்பான்மையான சோசலிச நாடுகளிலெல்லாம், சிறுபான்மைப் பிரச்சினை சமஷ்டி அரசியல் மூலமே தீர்க்கப் பட்டிருக்கிறது.

அண்மையில்கூட பொதுவுடமை ஆட்சி நடைபெறும் ஒற்றையாட்சி நாடாக இருந்த செக்கோசிலவக்கியா, சிறுபான்மை இனமான ஸ்லோவக் இன மக்களின் குறைகளைவதற்காக, சமஷ்டி அரசியல் நாடாக தன்னை மாற்றியமைத்துக் கொண்டிருக்கிறது. இதைப்பற்றி பொதுவுடமை-சமதர்மம் பேசும் நம்மவர்கள் கூறுவது என்ன? செக்கோஸ்லவெக்கியாவுக்கு பொருத்தமான சமஷ்டி ஆட்சிமுறை ஏன் இலங்கைக்கு பொருந்த முடியாது நண்பா?

தோழா, தமிழரசுமேடையில் பேசப்பயின்ற கம்யூனிஸ்ட் நண்பர் வி. பொன்னம்பலம் கூட கடந்த வாரம் தமிழர் பிரச்சினை தீர 'சோசலிசமே' வழியென்று அடித்துக் கூறியிருக்கிறார்.

நண்பா, பொதுவுடமைத் தத்துவத்தை செயற்படுத்திய மாமேதை லெனின், ரஷ்யப் புரட்சியின் முன் ரஷ்யாவில் உள்ள சகல தேசியஇனங்களுக்கும் அளித்த வாக்குறுதியென்ன தெரியுமா? புரட்சி நடந்து சோசலிச ஆட்சிநிறுவியவுடன், ரஷ்யாவிலுள்ளசகல தேசியஇனங்களின் தனித்துவமும் பாதுகாக்கப் படுவதுடன் சுயநிர்ணய உரிமையும் அவற்றுக்கு அளிக்கப்படும் என்று அறிவித்தார். அதன் பின்தான் லெனின் தலைமையில் ஆகா வென்றெழுந்த யுகப் புரட்சி நடந்தது. லெனின் கொடுத்த உறுதி மொழிப்படி தேசியஇனங்களுக்கு, விரும்பினால் பிரிந்து செல்லும் உரிமையுடன் சுயநிர்ணய உரிமையை அளித்தார்.

நண்பா, லெனினைப் பின்பற்றுவதாக கூறும் நம்முடைய கம்யூனிஸ்ட்டுகள் இந்த நாட்டிலும் சோசலிசம் மலரும் போது சமஷ்டி ஆட்சியும் மலரும் என்று உறுதி மொழி எழுத்துமூலம் கொடுப்பார்களா? அவ்வளவு துணிச்சலும், நேர்மையும் அவர்களுக்கேது?

தோழா, யாரையும் எந்தக் கட்சிகளையும் நம்பிப் பயனில்லை. நம்முடைய புறநானூற்றுப் புலவன் கூறியபடி தீதும் நன்றும் பிறர் தர வாரா. நம்மையே நாம் நம்புவோம். நம்மாலானதை தமிழினத்துக்குச் செய்வோம். நம்முடைய சுயாட்சிக் குரலை ஓயாது ஒலித்துக் கொண்டே இருப்போம். ஒரு நாள் பொழுது புலரத்தான் செய்யும். அப்போது தமிழினத்துக்கு விடுதலை கிடைப்பதை யாராலும் தடுத்து நிறுத்தி விட முடியாதென்ற துணிவுடன் தொடர்ந்து பணியாற்றுவோம்.

உன்,
அன்புள்ள தோழன்
—'கோவை'

## உகந்த உணவு எது?

ஜெர்மனியில் ஹாம்பர்க் நகரில் சமீபத்தில் நடைபெற்ற உணவுப் பொருட்கள் கண்காட்சியில் இடம் பெற்றிருந்த ஒரு 'கம்பியூட்டர்' பார்வையாளர் எவரேனும், தமது வயது' எடை, உயரம்' வேலை, குணம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு, 'கம்பியூட்டர்' இயந்திரத்தில் செலுத்தினால் அவர் என்னென்ன ஆகாரங்கள் சாப்பிட வேண்டும் என்ற விபரத்தைச் சில விநாடிகளில் திரும்பப் பதில் தெரிவித்து விடுகிறது.


உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல்'

போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

காக, தமிழ் இனத்தவரின் நலன்களைக் காக்கத் தவறுவதென்பது இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கு இயலாத காரியம். அதனால்தான் ஐக்கிய தேசியக் கட்சியுடன் தனக்குள்ள தொடர்பைத் துண்டித்துக்கொள்ள மிகவும் வருத்தத்தோடு முடிவெடுத்தது.

இதன் விளைவாக, டட்லி சேனநாயகாவின் ஆட்சி உடனடியாகக் கவிழ்ந்து விடும் என்று அஞ்சக்கூடிய நிலை இல்லை. 12 பேரைக்கொண்ட தமிழரசுக்கட்சியின் ஆதரவை இழந்த பின்னரும் வேறு சில சிறிய கட்சிகளின் ஆதரவைக்கொண்டு இன்னும் ஓராண்டைத் தள்ளிவிடும் பலம் ஆளுங் கட்சிக்கு இருக்கிறது.

# இலங்கைத் தமிழர்கள் ஒரே தலைமையின்கீழ் ஒன்றுபட வேண்டும்

இந்த ஜனநாயக சகாப்தத்திலே கட்சிப்பூசல் என்பது தவிர்க்க முடியாததொரு தீமையாகிவிட்டது. தலைமைப்போட்டி இருக்கும் வரைகட்சிப்பூசலும் இருந்து கொண்டுதான் இருக்கும். ஆயினும், பெரும்பான்மையினரான சிங்கள மொழியினரின் ஆதிக்கத்திலே சிக்கியிருக்கின்றனர் இலங்கைத் தமிழர்கள். அந்த ஆதிக்கத்திலிருந்து அவர்களை விடுவிக்க விரும்பும் தமிழ்த் தலைவர்கள் முதலில் தாங்கள் ஒன்றுபடவேண்டும். அந்த ஒற்றுமைதான் தமிழினத்தின் மூலபலமாகும்.

வடக்கு, கிழக்கு மாநிலங்களில் வாழும் தமிழர்கள், சிங்களவரோடு ஒப்பிடுங்கால், மிகவும் சிறுபான்மையினரே யாவர். 'சேர்ந்தாற்போல்வாழும் சிறுபான்மையினர்' என்பதொன்றே அவர்களுக்குள்ள தனிப் பலமாகும். இந்தப் பலத்துக்கேற்ப அவர்கள் ஒரே ஸ்தாபனத்தின் கீழ்—ஒரே தலைமைக் குட்பட்டு ஒன்றுபடவேண்டும்.

மலைநாட்டில் வாழும் தமிழர்களோ, சிங்களவர் மத்தியில் சிதறிக்கிடக்கும் சிறுபான்மையினராவர். அவர்களிலேயும் பெரும்பாலானவர் நாகரிக வளர்ச்சியை நாட முடியாதபடி தோட்டப் பிரதேசங்களிலே சிறைப்பட்டுக் கிடக்கின்றனர். அவர்களுக்குக் குடியுரிமையில்லை அதனால், வாக்குரிமையும் இல்லை. அவர்களுடைய எதிர்காலத்தைப் பயங்கரமான இருள் கவ்விக்கொண்டிருக்கிறது. அவர்களுடைய பிரச்சினையே முற்றிலும் அலாதியானது. அவர்களுக்காகவும் பாடுபட வடக்கு கிழக்கு மாகாணத்தவரால் நடத்தப்படும் தமிழரசுக் கட்சி முன்வருவதிலே, தவறு எதுவும் இல்லை. ஆனால், அதற்காக அது மிகவும் பொறுமையோடு முயல வேண்டும்.

'இந்தியத் தமிழர்' எனப் படுவோரின் பிரச்சினை ரோஜா மலர்போன்றது. நாசூக்காகத் தொடவேண்டும். தவறினால், இதழ்கள் கொட்டி, மலரின் வடிவமே மாறிவிடக்கூடும்.

## எழுச்சியை ஏற்படுத்திய...

7-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுமின்றி தமது இனத்துக்காக உயிரையும் அர்ப்பணித்தவர்கள் ஐயாவு—பிரான்சிஸ். இத்தியாகிகளின் பெயர் சூட்டப்பட்டுள்ள அரங்கில தொழிலாளர் மாநாடு நடைபெறுவது பொருத்தமாக இருந்தது

தொழிலாளர் மாநாட்டுக்கு பருத்தித்துறை பா.உ. திரு. துரைரத்தினம்தலைமை வகித்தார். கடந்த 4 ஆண்டுகளாக முதலாளித்துவ ஆட்சிக்கு முண்டு கொடுத்த நிலையிலிருந்து இன்று தமக்கு விடுதலை கிடைத்து விட்டதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்த திரு. துரைரத்தினம் சோசலிச பொருளாதார கொள்கைக்குக் தமிழரசுக்கட்சி விரோதியென இடதுசாரிகள் நடத்தி வரும் பொய்ப்பிரசாரத்தை பொடிப்பொடியாக்கினார். சோசலிசமே தமிழரசுக்கட்சியின் உயிர் மூச்சு என்றும், சோசலிசம் என்னும் பெயரால் சிங்கள 'இசம்' புகுத்தப்படுவதைத்தான் தமிழரசுக்கட்சி எதிர்ப்பதாகவும் தெரிவித்த துரைரத்தினம், 'சோசலிசம் மலராதவரை இந்த நாட்டுத் தொழிலாளிக்கு விமோசனமேயில்லை. பொருளாதார வளர்ச்சிக்கு இத்தகைய ஒரு மாற்றம் அத்தியாவசியம்' என்று அழுத்தமாக தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் கழகச் சார்பில் திரு. மூ. எல்லாளனும் சுருட்டுத் தொழிலாளர் கழக சார்பில் திரு. சி. நடராசாவும், நெசவு தொழிலாளர் சார்பில் திரு. ஆசீர்வாதமும், இலங்கை பஸ்தொழிலாளர் சார்பில் திரு. இ. பீதாம்பரமும், காங்கேசன் துறை சீமெந்துத் தொழிலாளர் கழக சார்பில் திரு. கே. நாகராசாவும், மீன்பிடிதொழிலாளர் கழக சார்பில் திரு. வி. அழகரத்தினமும், மட்டு நகர் அளவை தொழிலாளர் கழக சார்பில் திரு. வ. பாலசிங்கமும், திருமலை துறைமுக தொழிலாளர் கழக சார்பில் திரு. ஈழத்துநாதனும் இம் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இதன்பின் அமரர் இராஜவரோதயம் அரங்கில் இலுப்பைக்கடவை கிராமசபைத் தலைவர் திரு. வே. கைலாசபிள்ளை தலைமையில் விவசாயிகள் மாநாடு கூடுகிறது. மணி இப்போது பிற்பகல் 1-30. பசியோ வயிற்றைக் கிள்ளுகிறது.

விவசாயிகள் மாநாட்டில் திருமலை பாரதி விவசாயக் கழகத்தைச் சேர்ந்த திரு. திருநாவுக்கரசு, கல்முனையைச் சேர்ந்த நோ. மணிவாசகன், இ. தொ. கழகத்தை சேர்ந்த க. முத்துசாமி, தமிழரசுக்கட்சியின் பழம் பெரும் தொண்டரும் 'சுண்டியெடுத்த' விவசாயியுமான திரு. ஏ. கே. இராமலிங்கம், பொ. கனகசபாபதி, வீ. காராளசிங்கம் ஆகியோரது பேச்சுக்களை அவசர அவசரமாக கேட்டுவிட்டு மதிய உணவு உட்கொள்ளப் போவோமா?

வயிற்றுப்பசியை நீக்கிவிட்டு விரைவில் வாருங்கள்! மங்கையர்கள் சுவையான விருந்து படைக்க காத்திருக்கிறார்கள்!

—தொடரும்

## ஊர்காவற்றுறையில் புதிய தமிழரசுக் கிளை

ஊர்காவற்றுறைத் தொகுதிக்கு புதிய தமிழரசுக் கிளை சென்ற வாரம் நிறுவப்பட்டது. இதற்கான கூட்டம் வேலணையில் நடைபெற்றது. பண்டிதர் இரத்தினம் பா. உ. திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். பின் வருவோர் உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ச. அருமைநாதர்' செயலாளர்: க. திருநாவுக்கரசு, பொருளாளர்: வ. ஐயாத்துரை, அங்கத்தவர்கள்: புங்குடுதீவு - வே. க. சோமசுந்தரம், மு. நாகராசா, செ. சிற்றம்பலம், மண்டைதீவு-சி. கந்தையா, செ. பொன்னுட், அனலைதீவு-ச. கணபதிப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர்), வேலணை சரவணை- செ. பூதத்தம்பி, ப. கந்தசாமி, ச. நாராயணசாமி, ஆகியோரும் நயினாதீவு, நெடுந்தீவு, எழுவைதீவு ஆகிய இடங்களிலிருந்தும் அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

கட்சியின் பொதுச் சபைக்கு ச. அருமைநாதர், வ. ஐயாத்துரை, க. சோமசுந்தரம், சி. கந்தையா, ப. கந்தசாமி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

**கிளிநொச்சித் தொகுதியில் அண்மையில் நடைபெற்ற ஆண்டுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு:-**

**பரந்தன் கிளை**

தலைவர்:- ப. முத்துலிங்கம் செயலாளர்:- செ. நா. நடராசா பொருளாளர்:- செ. வீரசிங்கம்.

(2ம் பக்க தொடர்ச்சி)

தாய்மையை அழித்துவிட முடியாமல் அவள் குழம்பினாள். ராமு அண்ணை இருக்கும்வரை நான் எதற்கும் பயப்படத் தேவையில்லை. என்று தனக்குள்ளாகவே பேசி மனதைச்சாந்தப்படுத்திக் கொண்டாள். பேறு காலம் நெருங்கி பவானிக்கு வயிற்றில் வலி உண்டாகியதும் அவளை டாக்டர் ராஜனின் டிஸ்பென்ஸரியில் அனுமதித்தான் ரகு. அவனுக்கு ஒத்தாசையாக நிர்மலா சகலதையுஞ் செய்து கொடுத்தாள். இந்தக் குறுகிய காலத்துக்குள் ரகுவும் நிர்மலாவும் மனந்திறந்து பேசப் பழகிக் கொண்டனர்.

## எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு

ரகுவுக்கு வேண்டிய சகலதையும் நிர்மலா உரிமையோடு செய்து கொடுத்தாள். அவன் சாப்பிட வேண்டிய நேரத்தில் அன்புடன் கண்டித்தும் பழகிக் கொண்டவிதம் ரகுவுக்கு சிறிது இதமாக இருந்த போதும் அதை அவன் முற்றாக ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. அந்த டிஸ்பென்ஸரியில் அவன் ஓர் புறத்தொழிலாளியாகக் கடமையாற்றிய போதும் நிர்மலா தான் ஒரு படித்த தாதி என்ற கர்வம் ஒரு சிறிதுமின்றி அவன் மனதுக்கு மகிழ்ச்சி தரும் வகையில் நடந்துகொண்டாள்.

சென்றமுறை பவானி உடல்நிலை சுகமில்லாத காரணத்தால் டிஸ்பென்ஸரியின் அநுமதிக்கப்பட்ட போது ரகு அடைந்த தனிமையும் குழப்பமும் இம்முறை அவனுக்குத் தோற்றவில்லை. பவானி இல்லை என்கிற உணர்ச்சி தோன்றாமல் நிர்மலா அவனைக் கண்காணித்துக் கொண்டாள். ஆயினும் ரகு அவளோடு மனம்விட்டுப் பழகப் பயப்பட்டான். அவள் காட்டும் அன்பை ஏற்றுக் கொள்ள அவன்மனந்துடித்தபோதும் அந்தத்தகுதி தனக்கில்லையென அவன் மனம் அவனைச் சாடிற்று. பவானியை டிஸ்பென்ஸரியிற் சேர்த்து இரண்டு நாட்கள் முடிந்து விட்டன. மூன்றாம் நாட்காலை பவானிக்குச்சாடையாகப் பிரசவநோய் ஆரம்பமாகியிருந்தது. அவள் படும் வேதனையைத் தூரத்தில் இருந்து [illegible] ரகுவின் மனத் [illegible] அவள்படும் பாட்டைப் பார்த்தபின் அவ்விடத்தில் நிற்க விரும்பாதவனாய் அவன் மனபக்கஞ் சென்று இறைவனைப் பிரார்த்திக்கத் தொடங்கினான். அன்று அவன் அதிர்ஷ்டமோ அல்லது பவானியின் பிரார்த்தனையோ நிர்மலாதான் பகல் வேலைக்கு தலைமையாகப் போடப்பட்டிருந்தாள். அதனால் ரகு சிறிது அமைதியடைந்தான்.

அரைமணி நேரத்தின்பின் ரகு துடிக்கும் இதயத்துடன் மீண்டும் பவானியின் அறைப்பக்கஞ் சென்றான். அங்கே பவானியைக் காணவில்லை. அவன் பிரசவ அறைக்குக்கொண்டுபோகப் பட்டிருப்பதாகக் அறிந்தான். அவன் கால்கள் அவனையுமறியாமல்அவனை அந்த அறைக்கு இட்டுச் சென்றன அந்த அறைக்கதவோடு பதுங்கிக் கொண்டு அவன் வெளியே நின்றபோது பவானிபோடும் சத்தம் அவன் இதயத்தைப் பிளந்தது.

அப்பப்பா பிரசவம் எவ்வளவு வேதனையானது. ஒரு குழந்தையைப் பெறுவதற்குத் தாய் தன் உயிரையே பணயம் வைக்கும்போது குழந்தைகள் மட்டும் பெரியவர்களாகியதும் அதையேன் உணரமாட்டேன் என்கிறார்கள். ஒரு தாய் படும் பிரசவ வேதனையைப் பார்க்கும் எந்தக் குழந்தையும் தன் தாய்க்கு ஏழேழு ஜன்மங்களிலும் துரோகஞ் செய்ய எண்ணமாட்டாது என்று நினைத்துக் கொண்டு அந்த [illegible] விரும்பாமல் திரும்பிச்சென்றான்.

நிர்மலாதான் அன்று பிரசவ அறையில் 'டியூட்டி' எனக் கேள்விப்பட்டிருந்ததால் பவானிக்குச் சிறிது ஆறுதலாக இருக்கும் என எண்ணித் தன் மனதையுஞ் சமாதானப் படுத்திக் கொண்டான். அவன் திண்ணையில் குட்டிபோட்ட பூனை போல குறுக்கு மறுக்கும் நடந்துகொண்டிருந்தபோது அவ்வழியாக நிர்மலா மிகவும் அவசரமாக வியர்க்க விறுக்க நடந்து கொண்டிருந்தாள். அவள் தன்னிடந்தான் வருகிறாள் என்று நம்பியிருந்தவனுக்கு அவள் தன்னைத் தாண்டிச் சென்றது கலக்கத்தைக் கொடுத்தது.

ஒருவேளை பவானிக்குத்தான் ஏதாவது ஆபத்தோ என்று அவன் மனம் துடியாய்த் துடித்தது. நிர்மலா திரும்பி வரும்போது அவனிடம் இதுபற்றிக் கேட்கலாம் என அவன் ஏங்கியிருந்தபோது நிர்மலா திரும்பி வராமல் குறுக்குப்பாதையால் ஓட்டமும் நடையுமாகச் சென்று கொண்டிருந்தாள். அவள்மேல் ரகுவுக்கு அப்போதுதான் முதன் முதலாகக் கோபம் வந்தது; தன் பொறுமையைச் சோதிக்கத்தான் நிர்மலா அப்படி நடந்து கொள்கிறாளோ என்று ஆத்திரமடைந்தவனாய் அங்கு நின்றபடியே நிர்மலா என்றழைத்தான்.

அத்தனை அவசரத்திலும் நிர்மலா அவன் குரல் கேட்டு அப்படியே நின்றாள். ரகு அவளை நோக்கி ஓடினான். 'ராமு கொஞ்சம் பொறுமையாக இருங்கள். உங்கள் தங்கச்சிக்கு இன்னும் இரண்டொரு நிமிடத்தில்குழந்தை பிறந்துவிடும். அந்த நல்ல செய்தியை நானே உங்களுக்கு வந்து அறிவிப்பேன். அதுவரை கவலைப்படாமல் இருங்கள் என்று கூறிவிட்டு அவள் ஓட்டமாகச் சென்று பிரசவ அறையைச் சேர்ந்தாள். ஐந்துநிமிடத்தின் பின் அவள் வெளியே வந்தபோது ரகு அவளை ஆவலோடுபார்த்து நின்றான்.

—தொடரும்

## பிரதமருக்கு......

1ம் பக்கத் தொடர்ச்சி

"எனவே மாவட்டசபை மசோதாவை கொண்டு வந்து நிறைவேற்றும் ஆற்றலும் துணிச்சலுமற்றிருந்த பிரதமர் எம்மீது பழிபோடுவது அழகல்ல; பண்பல்ல; அறிவுடையுமல்ல;

"இதேபோல வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் —18 பேர் கைச்சாத்திட்டு தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவும்படி கோரிக்கை விடுத்திருந்த போது ஆக மூன்றுபேரது எதிர்ப்பை அக்கோரிக்கையை நிறைவேற்றாததற்கு காரணம் காட்டுவது வெறும் கண்துடைப்பாகும்'

—இவ்வாறு குறித்த எம். பி. தெரிவித்தார்.

ஒரு ரகசிய மருந்து!
ஆண்களுக்காக மாத்திரம் தயாரிக்கப்பட்டது
ஜனனேந்திரம் தளர்ச்சியடைந்த ஆண்கள் மாத்திரம் விபரங்கட்கு கேட்டெழுதுங்கள்; வைத்திய நிபுணர்:
பீ. எம். திஸ்ஸாநாயக்க,
த. பெ. இல. 1281, கொழும்பு—10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் காங்கிரசே! தமிழின ஒற்றுமைக்கு கொள்ளி வைக்காதே!

## எத்திப் பிழைக்கும் எண்ணம் இனியும் வேண்டாம்!!

அரசாங்கத்தை தொடர்ந்தும் தமிழ்க் காங்கிரஸ் ஆதரிக்கும்' என்ற முடிவு எவருக்கும் ஆச்சரியத்தையோ ஆறுதலையோ கொடுத்திருக்காதென்றே நினைக்கிறேன்.

'வேஷம்மாற்ற நாம் தயாரில்லை' என்பதால், தொடர்ந்தும் வேஷத்தோடே இருக்கப் போகிறோம் என்பதை தெளிவாக நாட்டுமக்களுக்கு உணர்த்திவிட்ட-'பெருமை' அகில இலங்கை தமிழ்க் காங்கிரசையே சாருவதாகும்!

'தமிழரசுக்கட்சி அரசாங்கத்தை எதிர்ப்பது' என்று செய்த முடிவு, அரசாங்கத்தை ஆதரிக்கவேண்டுமென்ற தமது முடிவிற்கு எவ்விதத்திலும் காரணமாக இருக்கவில்லை. என்று முன்னெச்சரிக்கையாகவே 'சமாதானம்' கூறி வைத்து தமிழ் மக்களை ஏமாற்றிவிடலாம். இல்லை—அவர்களிடம் தப்பித்துவிடலாம் என்று நினைப்பது,—அன்றி முயல்வது,—ஒற்றுமைக்காக ஓயாது சில நாள் பத்திரிகை அறிக்கைகள் மூலம் தமிழ் மக்களுக்கு உண்மையான ஒருமைப்பாட்டுணர்ச்சியுடனோ — அல்லது வேறு எந்த உணர்ச்சியுடனோ 'அறைகூவல்' விடுத்த தனிப்பெருந் தலைவருக்கோ—அல்லது அவரது கட்சிக்கோ—அழகல்ல; அறிவுடமையும் அல்ல!

'அழகல்ல, அறிவுடமையல்ல' என்பதால், இதற்கு முன்பு 'அழகிருந்தது; அறிவுடமை இருந்தது' என்று யாரும் கருதிவிடவேண்டாம். காரணம், காங்கிரசில் இருந்து— அதன் சுயநலப் போக்கிலிருந்து தமிழரசு' பிரிந்த அன்று முதலே, பதவிக்காக — தலைமைப் பெருமைக்காக — தமிழினத்தை அடகுவைத்து, எத்திப் பிழைக்கும் தன்மானமற்ற தமிழ்க் காங்கிரசின்— போக்கைக் கண்டித்து, 'தமிழினத்தில் இப்படியொரு கட்சி இருப்பதே அழகல்ல; என்றும் அப்படிப்பட்ட ஒரு கட்சியினை தமிழ் மக்கள் ஆதரிக்க நினைப்பதே அறிவுடமை அல்ல' என்றும் பேசிவந்திருக்கிறது. தமிழ் மக்களை அந்த அழிவுப் பாதையிலிருந்து காப்பாற்றி விடுதலைப் பாசறைக்கு வழிநடத்திச் சென்றது—செல்கிறது, தமிழரசுக் கட்சி!—இன்று நேற்றல்ல, என்றோ தமிழ் மக்களுக்குப் புரிந்துவிட்டது. எது 'அறிவுடமைக் கட்சி'— 'அழகுடைமைக் கட்சி' என்று!

தமிழரசார் அரசாங்கத்தோடு இருக்கும்போது எதையும் சாதிக்க முன்வராத காங்கிரசார், இனி எதை—எப்படிச் சாதிக்கப்போகிறார்கள்?

தமிழரசார் சாதிக்க நினைத்தவைகளுக்கெல்லாம், 'சாவு மணி' அடிக்க முந்தி நிற்கும் காங்கிரசாரிடம் இருக்கும் ஒரே ஒரு உருப்படியான 'தனிப்பெருந் தலைவர்போல தனிப்பெருங் கொள்கை— கொள்கை, அது. அதுதான், 'தன் மூக்குப்போனாலும், எதிரியின் சகுனம் பிழைக்க வேண்டும்' என்பது!

"அரசாங்கத்தை ஆதரித்து, தமிழர் பிரச்சனைகளைத் தீர்ப்பார்கள் என்றே காங்கிரசாரைத் தமிழ் மக்கள் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தார்கள். அவர்களது நம்பிக்கை வீண் போகக் கூடாது, என்று தமிழரசார் வெளியேறிய பின்பு வரிந்து கட்டிக் கொண்டு சொல்கிறார்கள்! 'பிரச்சனை தீர்க்க' இப்போதுதான் அவர்களுக்கு மக்களின் ஞாபகம் வந்திருக்கிறது போலும்!

### கல்முனை அண்ணாதாசன்

தமிழரசார் வெளியேறியதும்—மாநாடு மூலம் தீர்மானம் நிறை வேற்றியதும்—தேர்தலுக்காகவே — என்று எதிர்க் கட்சித் தலைவி 'அம்மையாரும்' இலங்கரத்ன போன்றவர்களும் கூறுவதைக் கேட்டு ஒருவாறு சகித்துக் கொள்ளலாம். காரணம், அவரகள் தமிழர்களை அடக்கி ஒடுக்கி ஆட்சிக்கு வரத் துடிப்பவர்கள்!-இனத்துவேஷிகள்!

அது போல் தமிழ் காங்கிரசாரும் தமிழரசு வெளியேறியது தேர்தலுக்காகவே என்று பிரச்சாரம் செய்வதை தமிழ் மக்களால் சகித்துக் கொள்ள முடியாது காரணம், தமிழ் மக்கள் விடுதலை வேட்கை கொண்டவர்கள்! தமிழரசின் கொள்கை வழி நிற்பவர்கள்! ஆமாம்; ஈழத் தமிழினம் உரிமைப் போராட உத்வேக உணர்ச்சி கொண்டு விட்ட நேரம் இது!

தமிழசரார் தேர்தலுக்காக, அரசாங்கத்தோடு வைத்த உறவைத் துண்டித்துக் கொள்ள வில்லை, என்பதை தமிழ் மக்கள் நன்ருக அறிவார்கள். ஆனாலும் "தேர்தல்" நடாத்தத்தான் போகிறார்கள், தமிழரசார், தமிழ் மக்கள் மத்தியில் ஆனால் இத்தேர்தல் மூலம் நாடாளுமன்றதில் பிரதிநிதித்துவம் வகிக்க யாரும் தேர்ந்தெடுக்கப் படமாட்டார்கள். தமிழரசார் நடாத்தப் போகும் புதுமையான, 'தேர்தல்' மூலம் தெரிவு செய்யப் படுவார்கள் தொண்டர்கள்!'

தொண்டர்களைத் தேர்ந்து எடுப்பதுதான், தமிழரசாரின் முழு நோக்கம். இந்த நோக்கத்தின் அடிப்படை, உரிமைப் போராட்டம்! தொண்டர்கள் சேர்ப்பது, தேர்தலுக்காக அல்ல! இனத்தின் விடுதலைக்காக!

இதனை, காங்கிரசார் உணர்வார்களாக! அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த 'திட்டங்கள்' இல்லாத பிரேரனைகள் கொணராத காங்கிரசார், அற்ப சலுகைகளைப் பெறுவதையே தமது இலட்சியமாகக் கொண்டவர்கள என்பதை நாட்டு மக்கள் என்றோ உணர்ந்து விட்டார்கள் என்பதை தனிப் பெருந் தலைவர்கள், இன்னும் உணரவில்லையா?

## பைந்தமிழ்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

மணமக்கள் இல்லறத்தை
மாத்தமிழால் தொடங்கிடுக
—மங்கும் இன்பம்

என்றார். அத்தோடு பார்ப்பான் சொல் வடமொழியால் வாழ்த்தாது பைந்தமிழால் பாங்கோடு மணமக்களை வாழ்த்திடுக வென இனிய வேண்டுகோளையும் எமக்கு விடுக்கிறார்.

—

## போட்டியின்றி தெரிவு

20.3.69ல் நடைபெற்ற செட்டிகுளம் முகத்தான் குளம் கிராமசங்கத்தோர் முதலாம் வட்டார அங்கத்தவராக தமிழரசுக் கட்சியைசேர்ந்த திரு. பொ. செல்வநாயகம் அவர்கள் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஏற்கனவே தமது கட்டுப்பணத்தை செலுத்தியிருந்த மூவர் கடைசி நேரத்தில் பெருந் தன்மையுடன் வாபஸ்பெற்றுக் கொண்டனர்.

## வள்ளுவன் கண்ட பொன்னுலகு படைப்போம்!

### (தவத்திரு. குன்றக்குடி அடிகளார்)

மண்திணி ஞாலம் அதனில் மானுடம்
தோன்றிய தொன்மையை யாரே அறிவார்?
அளப்பிலா அண்டம் அனைத்திலும் இயங்கும்
உயிர்களிலெல்லாம் உயர்ந்தது மானுடம்!
ஆளப் பிறந்தது; அறிவின் மேம் பட்டது!
அந்த மானுடச் சாதியிங் கோங்கியே
மாண்புறு நலமெலாம் மண்டிச் செழித்திடத்
தெரிந்து தெளிந்து வழியுரைத் தோர்பலர்
அவருள்,
வான்புகழ் வள்ளுவன் வடித்துக்காட் டியவழி
தேரா உலகில் தெளிந்த தனிவழி
காரிருள் கடிந்தெழும் செழுங்கதிர்ப் பொன்னொளி!
துன்னும் மனத்திருள் கடிந்தெழு ஞாயிறு;
வள்ளுவன் தந்த வான்மறை யதுவே!
வள்ளுவன் தந்த தெள்ளிய குறள்நெறி
குறுகிய நெறிகளைக் கடந்தவோர் பெரு
நெறி தரணியிற் சிறந்த தமிழினத் தனி
மறை பொதுமை நலங்கனி பொதுமறை! நவமணிக்
கற்களால் ஆய அணிமா ளிகைபோற்
சொற்களால் ஆய அறமணி மாளிகை!
அணிசிறந் தினிக்கும் சிந்தனைத் தேன்துளி!
சிந்தனைத் திறனால் சீர்பெறு வாழ்க்கை
தந்திடும் ஒருநெறி! கவின்நிறை வாழ்க்கை
கட்டி முடிக்கப் பெற்றது மன்றே!
அவலம் தீர்க்கும் அறிவுக் கற்களால்
அன்பில் நனைந்த உணர்வுச் சாந்தினால்
அனுபவம் என்ற வாழ்க்கைக் கொத்தன்
நாழிகை தோறும் முயன்று முயன்று
கட்டி முடிக்கப் படுவதே யன்றோ?
வள்ளுவன் தந்த வள்ளும், செந்தமிழ்
மண்ணில் புறந்த மாபே ரறிஞன்
அவன்மொழி மறைமொழி! ஆன்ற நிறைமொழி!
வள்ளுவம் பேசுதல் வண்மைத் தமிழில்'
பேசும் பொருளோ பேசும் மொழியினைக்
கடந்த பொருளாய்க் காட்சி தரும் பொருள்;
வள்ளுவன் நின்றது வண்டமி ழகத்தில்
அவனசிந் தனைநின் றதுபே ருலகில்!
உலகிற் கொருநெறி அதுபொது நெறியாம்,
சிதறிக் கிடக்கும் ஊர்களை இணைப்பது
சாலை; சிதறிய உள்ளங்களை யெல்லாம்
இணைப்பது வள்ளுவன் எழில்அறச் சாலை!
வள்ளுவன் வகுத்த நெறிஅன் புநெறி!
ஆழிசூழ் உலகின் அறநெறி! வள்ளுவன்!
படைக்கும் உலகம் புதுமை உலகம்
வேறுபா டுகளைக் கடந்தபே ருலகம்
சிறைகளாற் சிந்தனை உலகம்
குற்றம் நீக்கும் உலகமஃ தன்று
குற்றத்தின் குற்றம் நீக்கிடும் உலகம்!
இந்த உலகில் குற்றம் புரிந்தோர்
அந்தோ, கொடுமைக் காளாகின்றனர்!
வள்ளுவர் உலகம் குற்றம் செய்யத்
தூண்டு பவனை ஒறுத்திடு கின்றது!
"தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்ற மாகும்" என்றான் வள்ளுவன்
கள்வனைச் செல்வந்தன் தோற்றுவிக் கின்றான்
அழுக்கா றதனை ஆடம் பரமே
தோற்றுவிக் கின்றது. சொல்லவும் வேண்டுமோ?
[illegible] உறிஞ்சிக்
கொழுப்பவர் உழைத்தவர்க் கேழைமை சேர்ப்பான்
மேய்ப்பவர் உழைப்பின் ஏய்ப்பினா லன்றோ
வாய்த்தது ஏழைமை வளமையார் உலகில்!
"நோய்நாடி நோய்முதல் நாடுக" என்றான்
மானிடச் சாதியின் நோய்முதல் நாடின்
தனியுடை மையெனச் சாற்றவும் வேண்டுமோ?
ஊக்க முடைமை உடைமை என்றான்
ஊரில் மிகுந்த பெருநிலம் உடைமை
உடைமை யோஅஃது உலுத்த உடைமை!
வெகுளா மைதனைப் பேசுவான் வள்ளுவன்
ஆயினும் அவன்சில சமயம் வெகுண்டால்
இறைவனு னுலும் எற்றி விடுவான்
"இரந்தும் உயிர்தான் வாழ்தல் வேண்டின்
பரந்து கெடுக உலகியற்றி யா" னென்
றிடியென முழங்குவான்! எரியெனச் சுடுவான்!
அந்தோ அவன்தோன் றியநாட் டினில்கை
யேந்திப் பிச்சை யெடுப்பவர் கூட்டம்
பெருகி வளர்தல் பெரிய வேதனை!
மானுடச் சாதியின் மேடுபள் ளத்தை
நீக்கிட, ஒழுக்கம் நிலைத்துயர் சாதி
ஆக்கிட மேதை மார்க்ஸ்மா முனிவன்
"மூல தனம்" கண் டான்மூ தறிவால்
மார்க்ஸின் "மூல தன" த்தினை விரித்து
வளர்த்தான் மண்புகழ் லெனின்வை யகத்தே!
"மூல தன" நூல் தனக்குப் பதவுரை
பொழிப்புரை கண்டா னில்லை. பாரினில்
செழிக்கத் திட்டம் தீட்டி வறுமை
யற்ற உலகைப் படைத்தளித் தான்லெனின்!
ஒப்பில் லாதஓர் சாதனை யாகும்!
இருநூற்றாண்டின் முன்பு தோன்றிய
மார்கஸ் சொன்னசொல் செயலா வானேன்?
இருபது நூற்றாண்டுகளின் முன்பே
மொழிந்தான் நந்தம் வள்ளுவன்! ஆனால்,
நடந்தது என்ன? சொல்லுக் குச்சொல்
உணர்வினை மூடி மறைக்கும் வெற்று
படைத்த தன்றிப் பயனொன்றுமில்லை!
செயலிற் சிந்தை செலுத்தி னோமா?
நாயனா ராக்கி நற்சிலை யமைத்து
வெந்த சுண்டலைத் தின்று விட்டு
விதியென் றிருந்தோ மேயல் லாது
தீவினை மாய்த்த வழியொன் றில்லை!
வள்ளுவன் புகழ்க்கு மாசு தேடினோம்.
பொய்யா மொழியைப் பொய்ம்மொழி யாக்கினோம!
"தம்மின் தம்மக் கள்அறி வுடைமை
இனி" தெனச் சொன்னான். நாமோ ஆக்கும்
பணியொன் றின்றி அறவினை யிழந்து
பீடும் இழந்தோம் வாடிக் கிடக்கிறோம்!
விண்ணக மதனில் திரிதரும் வள்ளுவன்
கண்ணிலே செந்நீர் உகுத்துஅங் கிருந்தே
"எமதுநல் அருமைத் தமிழக மக்காள்,
போதும் போதும் வெறும்வழி பாடு!
போதும் போதும் விழவொலி! பாட்டும்
போதும்! பட்டி மன்றமும் போதும்!
செவிகள் காய்த்துப் போன செய்திகள்,
போதும் போதும்" என்றே புகல்வான்!
எழுக, வள் ளுவத்தை வாழ்வி லேற்றிடுக!
வள்ளுவன் கண்ட புதுமை உலகம்
காண்போம்! பொன்னுல காக்குவோம் இனியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு உங்கள் பரிகாரம் என்ன?

# துணிவிருந்தால் தேர்தல் விஞ்ஞாபனத்தில் திட்டவட்டமாக அதை வெளியிடுங்கள்!

## சிங்களக் கட்சிகளுக்கு இராசமாணிக்கம் சவால்!

"சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளுக்கு துணிவிருந்தால் அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் குறிப்பாக சிறுபான்மை மக்களின் மொழியுரிமை, பிரதேசவுரிமை, தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்சினை போன்றவற்றில் தாம் கடைப் பிடிக்கவிருக்கும் கொள்கைகளை தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளிப்படையாகத் தெரிவிக்கட்டும். அப்போதுதான் இவர்களின் நல்லெண்ணமும் பெருந்தன்மையும் புரியும்.

"இத்தகைய தேர்தல் விஞ்ஞாபனங்களை எவ்வளவு தூரம் சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்கிறாகள் என்பதைப் பார்ப்போம். தமிழ் மக்களை ஏமாற்றி அவர்கள் மீது சவாரி செய்து ஆட்சி பீடம் ஏற முயலாதீர்கள் என்று தென்னிலங்கை அரசியல் கட்சிகளை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

—இவ்வாறு தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சி. மு. இராசமாணிக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் திரு. இராசமாணிக்கம் மேலும் கூறுவதாவது:-

"இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் தனித்தமிழ் கட்சிகளை ஆதரிக்காது சிங்களக் கட்சிகளையே ஆதரிக்க வேண்டும் என்று தென்னிலங்கை அரசியல்வாதிகள் கூறுவதும் இந்நாட்டில் ஒரு அடிமைப்பட்ட சிறுபான்மை இனத்தை உருவாக்குவதற்கு போட்டுள்ள சதித் திட்டத்தின் ஒரம்சமாகும்.

"சிறுபான்மை மக்கள் எப்போதும் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் ஆதிக்கத்திலேயே வாழ வேண்டும் என்ற நியதியை இந்த நாட்டு ஒற்றையாட்சி அரசியலமைப்பு ஏற்படுத்தியுள்ளது.

"சிங்கள மக்களின் ஆதிக்கத்திலேயே தமிழ் பேசும் மக்கள் வாழவேண்டும் என்ற கட்டுக் கோப்புக்குள்தான் சிங்களக் கட்சிகள் எல்லாம் செயலாற்ற முனைகின்றன. இவர்களின் அரசியல் வரையறைவை எதிர்க்க முனையும் எவரையும் 'தேசியத்தின் எதிரிகள்' 'நாட்டின் ஒற்றுமையை குலைப்பவர்கள்' என்று கூற முனைகிறார்கள். இதனாலேயே இவர்கள் தமிழ் பேசும் மக்கள் தனியாக இயங்குவதை எதிர்க்கிறார்கள்.



தனித் தமிழ்க் கட்சிகள் தமிழ்பேசும் மக்களின் தனித்தன்மையை பொதுவாகவும் தமிழனுடைய சிறப்புகளை குறிப்பாகவும் காப்பாற்றி வருவது சிங்கள அரசியல் வாதிகளுக்கு கசப்பாக இருக்கிறது.

தமிழ் மக்களுடைய கட்சிகள் என்னும்போது அது பெரும்பாலும் தமிழரசுக்கட்சியையே குறிக்கிறது. தமிழரசுக் கட்சியே இவர்களுக்கு பெருந்தலையிடியைக் கொடுத்துவருகிறது. தமிழ் காங்கிரசோ, சிங்களக் கட்சிகள் விரும்புவது போலவே ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து பாராளுமன்றத்துக்கு வருகின்ற பிரதிநிதிகள், பெரும்பான்மைச் சிங்கள கட்சிகளின் கொள்கைகளை ஏற்று அதன் எண்ணப்படி வாக்களித்தால் அவர்களுக்கு தலையிடியே வராது. அவர்களின் அரசியலும் தடையின்றி இயங்கும். இதுவே சிங்களக் கட்சிகளின் ஆசை.

சிங்கள அரசியல் கட்சிகளுக்கு நாம் அளித்த ஆதரவினால் எத்தகைய பலனும் கிடைக்கவில்லையென்பதை கடந்த காலம் தெளிவாக உணர்த்திவிட்டிருக்கிறது. இந்த நிலையில் சிங்களக் கட்சிகளுடன் தமிழ் மக்கள் இரண்டறக் கலப்பதால் இனிமேல் எவ்வித பலனும் கிடைக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதமிருக்கிறது?

'சிங்களக் கட்சிகளின் அர்த்தமற்ற கோஷத்தில் தமிழ் மக்கள் ஏமாந்து தமிழ்ப் பிரதேசங்களைச் சிங்கள அரசியல்வாதிகளின் கைகளில் சிக்கவைத்துவிடக் கூடாது.'

# பைந்தமிழ் வளர்த்த பாரதிதாசன்

ஈழவேந்தன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

தமிழுக்கும் தனக்கும் உள்ள பிரிக்க முடியாத பிணைப்பை எடுத்துக் கூறும் பாரதிதாசன் அவர்கள் தமிழின் தனி உயர்வைக் கூற முன்வரும் போது தனிமைச் சுவையுள்ள சொல்லை தமிழினும் வேறெங்கும் யாம் கண்டதில்லை என்ற வாய்மொழியின் வாயிலாக தமிழின் தனித்தன்மையைப் பாதுகாக்கும் முறையில் தனித்தமிழ்ச் சொற்களை கையாள வேண்டும் என்று அவர் வலியுறுத்துவது எமக்குப் புலனாகின்றது. இவரின் வழிகாட்டி பாரதியும் "சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே" என்று தமிழ்ச் சொல்லின் உயர்வு கூறிச் சென்றது இங்கு குறிப்பிடத் தக்கது.

### தமிழில் புதுமை வேண்டிய புலவர்

தமிழின் தனித் தன்மையைப் பேண விழையும் இப்பாவலர் தமிழின் தகைமையறியாதார் தமிழில் ஏடெழுதல் தவறு என்பதை "இலக்கணமும் இலக்கியமும் அறியாதான் ஏடெழுதல் கேடு நல்கும்" என்ற வரியினால் எடுத்துரைப்பது தெரியவருகிறது. தமிழின் தனி இயல்பைப் பற்றியும் இலக்கண இலக்கிய வழுப் பற்றியும் இவர் எடுத்துரைப்பதினால் ஏதோ தமிழ் மக்களுக்கு புரியாத உயர்ந்தநடையில் எழுதவேண்டும் என்பதே இவரின் நோக்கம் என்று கொள்ளுதல் தவறுடைத்து.

இதோ அவர் 'உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள் ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில் சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்' என்று கூறிச் செல்வதில் இருந்து ஊரறியும் எளிய இனிய தமிழை அவர் விரும்புகிறார் என்பது தெற்றெனப் புலப்படுகிறது. எளிய நடையில் தமிழ் நூல்களை எழுதிட வேண்டும் என்று விரும்பும் இவர் "இலக்கண நூல் புதிதாக இயற்றுதல் வேண்டும், வெளியுலகில் சிந்தனையில் புதிதுபுதிதாக விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயரெல்லாங் கண்டு தெளியுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து செந்தமிழை செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்" என்று வேண்டுகோள் விடுப்பதின் மூலம் தமிழைப் புதிய புதிய துறைகளில் காலத்தின் தேவையை நிறைவேற்றும் முறையில் வளம்படுத்த வேண்டும் என்ற அவரின் விடுதல் அறியா விருப்பையும் உணர்த்திச் செல்கிறார்.

காலத்தோடு ஒட்டிய வளர்ச்சியை தமிழில் ஏற்படுத்தாது "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதிலே மகிமையில்லை" என்று எச்சரித்த பாரதி அவர் வழி வந்த பாரதிதாசன் "எங்கள் தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லி தலைமுறைகள் பல கழிந்தோம் குறைகளைந்தோமில்லை தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்" என்று மேலும் ஒரு படி சென்று வெறுமனே பழம் பெருமை பேசாது தகுந்த முறையில் தமிழை நிலைநாட்ட எமக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழகத்தில் தமிழைவளம் படுத்தும் தமிழ் நூல்கள் தோன்ற வேண்டும் என்று விரும்பும் இவர் "தமிழ் தழுவா சுவடிதனை தனைல் தழுவல் உறுதி" எங்கள் தமிழ்ப் பகைவர்களை எச்சரிக்கிறார். அத்துடன் தமிழன் இசைக்கும் இசை, கேட்கும் இசை அனைத்தும் தமிழ் இசையாகத் தழைத்தோங்க வேண்டும் என்பது பாரதிதாசன் பேரவா. இதை ஏன் ஒலி செய்தார் செந்தமிழ் நாட்டில் இன்னொரு மொழியில் அமைந்த பாட்டை" என்று விடுக்கும் வினாவினால் உணர்த்திச் செல்கிறார். இதே புலவன் புரியாத மொழியைப் புரிந்ததாகப் பாவனை செய்து பூரிப்பில் ஆழும் புத்திகெட்டவர்களைப் பார்த்து இருட்டினில் சித்திரத்தின் திறன் தெரியுமோ, புரியாத மொழிக்கு புத்தமுதம்என்று கைத்தாளமிடுகிறீரே என்று எள்ளி நகையாடி ஏளனம் செய்யும் நம் கவிஞர், சங்கீத விற்பனனும் ஒரு சண்டாளன் ஆரபித்தான் இந்துஸ்தான் ஒன்றை' என்ற வரியின் வாயிலாக தமிழிற் பாடாத இசை வல்லுனரிடை அவருக்கு இருக்கும் எல்லையற்ற வெறுப்பை...... ஆற்றொணு ஆத்திரத்தை யாம் காணக் கூடியதாக இருக்கின்றது. இவ்விதம் தமிழின் தனி இயல்பைக் கெடுக்கும் பிறமொழி இசையை ஒறுக்கும் பாரதிதாசன், குலுங்கும் அரும்பும் செந்தமிழ் நாட்டில்குளிர்ந்த செந்தமிழ் கேட்டு மலரும் என்ற பாடலின் வாயிலாக செந்தமிழின் சீரியசிறப்பினை செப்பிச் செல்வது எம் சிந்தைக்குத்தனி விருந்தாய் அமைகிறது.

மணமக்களை
மாத்தமிழால்
வழுத்துமபடி
வேண்டியவா

இவ்விதம் தமிழில் நல்ல உரைநடையையும் நல்ல தமிழ் இசையையும் படிக்கவும் பருகவும் எல்லையில்லா ஆவல் கொண்டுள்ள நம் பாவலர் தமிழரின் திருமணங்கள், தமிழரின் கோயில் வழிபாடு ஆகியவும் தமிழிலே நடைபெற்றால்தான் தமிழருக்கு ஒரு வாழ்வும் ஒரு புது மலர்ச்சியும் ஏற்படும் என்பது அவரின்முடிந்த முடிபு. இதை அவர் தமிழ்ச் சொல்லையே காணமுடியாத 'விவாக சுப முகூர்த்தமென வெளிப்படுத்தும் மண அழைப்பில் மேன்மை என்ன என்ற கேள்வியைக் கேட்டு மேன்மையில்லை என்பதை உணர்த்தும் கவிஞர் 'மணமெல்லாம் வடசொல்லாலே ஆனவையா சொல்லிடுவீர் அந்நாளில் தமிழர் மணம் தமிழ்ச் சொல்லாலே ஆனதென அறிவீரோ என்று மேலும் வினவிடுத்து விடையும் கூறிச் செல்கிறார். உண்மையில் தமிழ் மணமக்கள் இல்லறம் மலரவேண்டுமென்றால்

மணமக்கள் தமைத் தமிழர்
வாழ்க என வாழ்த்துமொரு
வண் தமிழ்ச்சே
இணையாகப் பார்ப்பான்—
சொல்
வடமொழியா, தமிழர்—
செவிக்
கின்பம் ஊட்டும்
பணமிக்க தலைவர்களே
பழியேற்க வேண்டாம் நீர்
திருமணத்தில்


(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்பொழுது காட்சியளிக்கிறது!

செல்லமகால் (கொழும்பு) ஈரோஸ் (பாமன்கடை) இம்பீரியல் (மட்டுநகர்) நெல்சன் (திருமலை) றீகல் (நீர்கொழும்பு) தாஜ்மகால் (மாத்தளை) ஸ்ரீமுருகன் (வவுனியா)
வின்சர் (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன், ஜெயலலிதா, ஏ. வி. எம். ராஜன்,
நாகேஷ், தங்கவேலு, சோ, மனோரமா, வி கோபால
கிருஷ்ணன் சச்சு, ஜோதிலட்சுமி, ராஜேஸ்வரி,
சுந்தரிபாய், வி. எஸ். ராகவன்,
—நடிக்கும்—



## கலாட்டா கல்யாணம்

# 4 வது வெற்றி வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) விஜயா (மட்டுநகர்) வெலிங்டன் (யாழ்நகர்)
ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) அயன் (மன்னார்)



எம். ஜி. ஆர். — ஜெயலலிதா — நாகேஷ்
—நடிக்கும்

## சந்திரோதயம்

விரைவில் எதிர்பாருங்கள்

## அதே கண்கள் ஈஸ்மன் கலர்



# மே மாதம் 3ந் திகதி முதல்

## சென்ட்ரல் — (மருதானை)
மற்றும் திரைகளில்

பணத்துக்கும், பாசத்துக்கும் ஒரு போட்டி வைத்துப் பணமா? பாசமா? என்று ஒரு சித்திரத்தை உருவாக்கி பணத்திலும் பார்க்க பாசம்தான் பெரிதென நிரூபித்துக் காட்டியுள்ள 'இயக்குநர்திலகம்' கே. எஸ். கோபாலகிருஷ்ணன் இப்பொழுது உயிருக்கும் மானத்துக்கும் ஒரு போட்டி வைத்து உயிரா? மானமா? என்று கேள்வியை உண்டாக்கி உள்ளார்! விடைகாணப் பாருங்கள் உயிரா? மானமா?

ஜெய்சங்கர், டி. கே. பகவதி, எஸ். வரலட்சுமி,
நாகேஷ், நம்பியார், கிருஷ்ணகுமாரி,
முத்துராமன், ராகவன், சகுந்தலா, மல்லிகா,
ராதாபாய் நடித்த,
அமர்ஜோதி மூவிஸ்

## உயிரா? மானமா?

கதை-வசனம்-டைரக்‌ஷன் 'இயக்குநர் திலகம்' கே. எஸ். கோபாலகிருஷ்ணன். இசை 'மெல்லிசை மன்னர்' எம். எஸ். விஸ்வநாதன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1969- வருடம் மே மாதம் 1-ந் திகதி வியாழக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது தொலைபேசி:23411